# மாலை தீப்பொறி

MALAE THEEPORI





2025 மார்ச் 16-31 தொகுதி 23 இதழ் 15 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200




# போராடும் ஜனநாயக உரிமையை நசுக்குவது முறையா?

# தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் போராட்டத்தில் பீகார் மாநில இகக(மாலெ) நாடாளுமன்ற உறுப்பினர் சுதாமா பிரசாத்



தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை நாகரீகமற்றவர்கள் என்று கூறி தமிழ்நாட்டு மக்களையே அவமரியாதை செய்த ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்தும் அவர் பதவி விலகக் கோரியும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நடத்திய போராட்டத்தில் பீகார் மாநில இகக(மாலெ) நாடாளுமன்ற உறுப்பினர் சுதாமா பிரசாத் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தார்.

## அனைத்து கட்சிகள் கூட்டத்தில்...



ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறைக்கு எதிராக தமிழ்நாடு அரசு கூட்டிய அனைத்து கட்சிகள் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலையின் சார்பாக மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி கலந்து கொண்டு. ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து கட்சியின் நிலைப்பாட்டை முன்வைத்துப் பேசினார்.

தலையங்கம் தொடர்ச்சி...

விவசாய நிதிநிலை அறிக்கையில் விவசாயத்துறைக்கு ரூ.45661 கோடி அதாவது கடந்த ஆண்டைவிட ரூ.3380 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவையெல்லாம் பெருமைப்படக் கூடியவைதான் என்றாலும், மாற்றுத் திறனாளிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் பற்றி நிதி நிலை அறிக்கையில் எந்தவொரு அறிவிப்பும் இல்லாதது ஏமாற்றமே. பழைய ஓய்வூதியத் திட்டம், போக்குவரத்து ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணிக் கொடை உள்ளிட்ட ஓய்வூதியப் பயன்கள், அரசுத் துறையில் பல இலட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது இவை பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. இந்த நிலையில், அரசு ஊழியர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டால் அவர்களுக்குச் சம்பளம் கிடையாது என்றும் ஒப்பந்த ஊழியர்கள், தற்காலிக ஊழியர்கள் போராடினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைச் செயலர் சுற்றறிக்கை அனுப்பி மிரட்டுகிறார். எந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம் என்று சொல்லி திமுக ஆட்சியைப் பிடித்ததோ அந்தக் கோரிக்கைகள் நான்கு ஆண்டுகள் முடிந்த பின்னரும் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தினால், போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். கோரிக்கைகளைக் கேட்பதும் அதற்காகப் போராடுவதும் ஜனநாயக உரிமை. அதை ஒடுக்க முயற்சிப்பது என்பதற்கு மாறாக, கோரிக்கைகளை நிறைவேற்றுவதுதானே மக்கள் அரசாக இருக்க முடியும். போராடும் ஜனநாயக உரிமையை நசுக்குவது முறையா?

# மாலெ தீப்பொறி

**இருவார இதழ்**

*2025 மார்ச் 16 - 31*

தொகுதி 23 இதழ் 15



முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**



**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840341741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com


**தலையங்கம்**

## போராடும் ஜனநாயக உரிமையை நசுக்குவது முறையா?

உழைக்கும் மக்களுக்கு எதிராக அவர்களின் உரிமைகளைப் பறிக்கிற வகையில் தொழிலாளர் சட்டங்களை நான்கு சட்டத் தொகுப்புகளாக மாற்றி அதை புறக்கடை வழியாக அமல்படுத்துவதற்கு மோடி அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் குறிப்பாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து தொழிற்சங்கங்களின் மண்டல மாநாடுகள் நடைபெற்று வருகின்றன. அதில் திமுகவின் தொழிற்சங்கமான தொமுச முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றது. அனைத்துத் தொழிற்சங்கங்களும் சேர்ந்து வரும் மே 20 அன்று நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. தொழிலாளரின், உழைக்கும் மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம் என்ற முழக்கத்துடன் ஏஐசிசிடியுவும் களத்தில் போராடிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், கடந்த 14ம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தில், 2025-26 நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு முன் வைத்தார். ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் அய்ந்தாண்டு கால ஆட்சியில் முன்வைக்கப்படும் கடைசி முழு நிதிநிலை அறிக்கை என்ற அடிப்படையில், 2026ல் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு தேர்தல் வரவிருக்கிறது என்கிற சூழ்நிலையில், மிகுந்த எதிர்பார்ப்புகளை தமிழ்நாட்டு மக்கள் மத்தியில், குறிப்பாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளரிடத்தில் ஏற்படுத்தியிருந்தது. ஒன்றிய மோடி அரசு, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய கல்விக்கான நிதியைத் தருவதற்கு மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் அதாவது இந்தியை தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்தில் கட்டாயமானதாக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து அராஜகம் செய்து வரும் நிலையில் தமிழ்நாட்டு நிதிநிலை அறிக்கையின் முகப்பில் 'ரூ' என்று குறிப்பிட்டு தாய் மொழி, தமிழ்மொழி முக்கியத்துவத்தை உணர்த்திய வகையிலும் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ள வகையிலும் பாராட்டுக்குரியதும் வரவேற்கத்தக்கதுமாகும். அதேபோல், மகளிர் நலன் மற்றும் குழந்தைகள் நலன்களில், மகளிருக்குச் சொத்துப் பதிவில் கட்டணச் சலுகை, புதுமைப் பெண் திட்டத்திற்கு ரூ.420 கோடி, கோவை, சென்னை, மதுரையில் ரூ.275 கோடியில் மாணவியர் விடுதி, ரூ.77 கோடி மதிப்பீட்டில் 10 இடங்களில் புதிதாக தோழி விடுதிகள், புதிய சுய உதவிக் குழுக்கள் 10,000, சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.37,000 கோடி வங்கிக் கடன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நகர்ப்புர அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவாக்கம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ரூ.13,807 கோடி, ஒரு லட்சம் மகளிர் தொழில் முனைவோர் என திட்டங்களும் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இவற்றால் பயனடைபவர்கள் எண்ணிக்கை என்பது மிகக் குறைவாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, நகர்ப்புரத்திற்கும் விரிவாக்கப்பட்ட காலை உணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்கள் 3 லட்சம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால், அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் உணவு என்பது முக்கியமில்லையா? 500 அங்கன்வாடி மையங்கள் திறக்கப்படுகின்றன. ஆனால், இதுவரை அங்கன்வாடி ஊழியர்களின் பணிநிரந்தம், ஊதிய உயர்வு எல்லாம் பகல் கனவாகவே இருந்து கொண்டிருக்கிறது. பள்ளிக் கல்வியில் சேலம், கடலூர், திருநெல்வேலியில் 1 இலட்சம் புத்தகங்களுடன் நூலகங்கள் நிறுவுவது மகிழ்ச்சியான ஒன்று. 1721 முதுகலை ஆசிரியர்கள் 841 பட்டதாரி ஆசிரியர்கள் நேரடி நியமனம் என்றும் உயர் கல்வியில் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு ரூ.2500 கோடியில் கல்விக் கடன் என்றும் அண்ணா பல்கலைக் கழகத்தை முதன்மை பெறச் செய்திட ரூ.500 கோடி என்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்திற்கு ரூ.420 கோடி, 10 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதலாக 15,000 இடங்கள் எனவும் தமிழ்நாடு செமி கண்டக்டர் இயக்கம் 2030, அதி நவீன உயிர் அறிவியல் பூங்கா, தமிழ்நாடு கடல் போக்குவரத்து உற்பத்திக் கொள்கை 2025 என பல திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

**தொடர்ச்சி 2ம் பக்கம்...**

# இந்திய பாசிசத்தை அடையாளம் காண்பது இப்போது இல்லையென்றால் பின் எப்போது?

திபங்கர்

சிபிஐ(எம்) கட்சியின் 24வது காங்கிரஸ் நடைபெறப்போகும் தறுவாயில், அக்கட்சியின் அரசியல் தலைமைக்குழுவால் கட்சிக்குள் விவாதத்திற்காக ஓர் அறிக்கை சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. ஊடகங்களில் விரிவாக வெளியிடப்பட்ட அந்த அறிக்கை, இதற்கு முன்பாக வெளியிடப்பட்ட அக்கட்சியின் நகல் தீர்மானத்தைவிட அதிக அளவில் பொதுமக்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. அந்த நகல் தீர்மானம், இன்றுள்ள அரசியல் நிலைமையையும் மோடி அரசாங்கத்தையும் விவரிக்கும் பொருட்டு இரண்டொரு இடங்களில் 'நவ-பாசிச தனித்தன்மைகள்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளது. இப்போது கட்சிக்குள் விவாதிப்பதற்காக சுற்றுக்கு விடப்பட்டுள்ள குறிப்பு, 'நவ-பாசிச தனித்தன்மைகள்' என்பதன் பொருள், சில தன்மைகள் அல்லது போக்குகள் மட்டுமே; அவை எந்தவகையிலும் மோடி அரசாங்கத்தை பாசிச அல்லது நவ–பாசிச ஆட்சி என சித்திரிப்பவை அல்ல என்று தெளிவுபடுத்துகிறது. இங்குதான் அது, இந்தியாவில் இப்போதுள்ள நிலமைகளைப் பற்றிய பகுப்பாய்வைப் பொருத்தவரை, சிபிஐ, சிபிஐ(எம்-ல்) கட்சிகளிலிருந்து வேறுபடுவதாகச் சுட்டிக் காட்டுகிறது.

ஒருவேளை 'நவ பாசிசம்' என்ற சித்திரிப்பு, இன்றைய சூழலில் சிபிஐ(எம்), சிபிஐ(எம்-எல்) கட்சிகளுக்கு இடையே உள்ள வேறுபாடு 'நவ' என்ற அடைமொழியை மட்டுமே சுற்றியுள்ள ஒன்று என்ற குழப்பத்தை சிபிஐ(எம்) அணிகளுக்குள் ஏற்படுத்தி விடக்கூடும் என்பதால், இப்போது சுற்றுக்கு விடப்பட்டுள்ள குறிப்பு அதைப் பற்றிய 'விளக்கத்தைக் கூறும்' சிரமத்தை எடுத்துக் கொண்டுள்ளது. அதாவது 'பாசிசம்' என்பது இப்போது ஒரு போக்காக மட்டுமே உள்ளது என்றும், இப்போது தென்படும் தனித்தன்மைகள் தோன்றிக் கொண்டுள்ளனவே தவிர, மோடி ஆட்சியின் தன்மையை வரையறுப்பதற்குப் போதுமானதாக நன்கு வேரூன்றியுள்ளவையாக, தீர்மானகரமானவையாக ஆகவில்லை என்றும் கூறுகிறது. சிபிஐ(எம்) கட்சி ஆவணமொன்றில் நவ பாசிசம் என்ற சொல் முதல் முறையாகக் காணப்படுவதால், கட்சி அணிகள் அதை அப்படியே அதற்குள்ள பொருளில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை உறுதி செய்து கொள்ள அக்குறிப்பு விரும்புகிறது. வேறுவிதமாகச் சொல்வதென்றால், 'பாசிசம்' என்ற சொல்லை இனிமேலும் தவிர்க்க முடியாது என்பதாக இன்றைய நிலைமை இருப்பதால், இந்தக் குறிப்பு பாசிச அபாயத்தைக் கட்சி அணிகள் மிகைப்படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டுமென்றும் எச்சரிக்க விரும்புகிறது.

இத்தாலியிலும் ஜெர்மனியிலும் இருந்த பாசிசத்தை மூலமுதல் பாசிசம்' (*classical fascism*) என்று சித்திரிக்கும் இந்த குறிப்பு, அந்தக் காலத்தில் இருந்த பாசிச வகையிலிருந்து இப்போது வெளிப்பட்டு வருகிற நவ பாசிசப் போக்கு வேறுபடுகிறது என்றும் சொல்கிறது. இந்த வேறுபாட்டின் ஒரு பகுதி, அந்தந்த சூழலுக்கும் காலத்துக்கும் உரியவை; அதாவது, உலகப் போர்களுக்கு இட்டுச் சென்ற ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போட்டாபோட்டி ஏற்பட்ட நிலையிலும், முதல் உலகப் போர் நடந்ததை அடுத்து ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம் (*Great Depression*) என்றழைக்கப்படும் முதலாளியத்துக்கு ஏற்பட்டிருந்த, கடும் நெருக்கடி நிலவிய சூழலிலும், இத்தாலியிலும் ஜெர்மனியிலும் பாசிசம் தோன்றியது. ஆனால், சிபிஐ (எம்) கட்சியின் குறிப்பு அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. முதலாளித்துவ ஜனநாயகத்தை மறுத்ததுதான், இத்தாலியிலும் ஜெர்மனியிலும் காலத்துக்கும் சூழலுக்கும் உகந்தபாசிசமாக இருந்தது. மேலும் அதன் உள்ளியல்பானதாகவும் இருந்தது. ஆனால், 'நவ' பாசிச வகையோ முதலாளித்துவ ஜனநாயகத்துடன், குறிப்பாக தேர்தல் முறையுடன் ஒத்துப்போகக்கூடியதாகத் தோற்றம் தருகின்ற ஒன்று என்று கூடுதலான ஒரு விளக்கத்தையும் தருகிறது. வேறுவிதமாகச் சொல்வதென்றால், மூலமுதல் (*classical Fascism*) பாசிசத்திற்கு உள்ளே தடுத்து நிறுத்தக்கூடிய வழிவகைகள் ஏதும் இருக்கவில்லை. எனவே அது ஜனநாயகத்தின் ஒவ்வொரு துண்டு துகளையும் நாசமாக்குகிற மூர்க்கத்தனமான அழிவுப் புயலைக் கட்டவிழ்த்துவிட்டது. ஆனால் நவ பாசிச வகையிலோ தனக்குத்தானே வரம்பிட்டுக் கொள்கிற, தன்னைத்தானே வரன்முறைப்படுத்திக் கொள்ளும் கூறு உள்ளது என்றும் சிபிஐ(எம்) சுற்றுக்கு விட்டுள்ள குறிப்பு கூறுகிறது.

பழைய வகை பாசிசத்திற்கும் அதனுடைய 'நவ' அவதாரத்துக்குமிடையே உள்ளதாகச் சொல்லப்படும் இந்த வேறுபாடும், அதேபோல் இந்தியா இப்போது பார்த்துக் கொண்டிருப்பதும் அனுபவித்துக் கொண்டிருப்பதும் என்னவென்றால் ஏதோ சில –நவ பாசிச போக்குகள்தான் என்றும், அவற்றைக் கட்டுப்படுத்தாமல்

போனால், எதிர்காலத்தில் இந்தப் போக்குகள் நவ-பாசிசமாக வளர்ச்சியடையக் கூடும் என்று சிபிஐ (எம்) கூறுவதும் மிக எச்சரிக்கையான கவனத்தைக் கோருகின்றன. 1920களில் பாசிசம் தோன்றியதற்கான வரலாற்றுச் சூழலைப்பற்றி நாம் பேசும்போது, ஏகாதிபத்தியங்களுக்கு இடையே நடந்த மூர்க்கத்தனமான மோதல், கடுமையான பொருளாதார நெருக்கடி ஆகியவை இருந்தன. இது தவிர கூடுதலான வேறொன்றும் இருந்ததையும் கருத்தில் கொள்ள வேண்டும். அது புரட்சியை பற்றிய அச்சம். 1848ஆம் ஆண்டிலேயே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, போற்றுதலுக்குரிய ஒரு வாக்கியத்துடன் தொடங்குகிறது.–''அய்ரோப்பாவை ஒரு பேய் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது- கம்யூனிசம் என்கிற பேய்''. 1917 நவம்பரில் ரஷ்யாவில் நடந்த வெற்றிகரமான சோசலிசப் புரட்சிக்குப் பிறகு கம்யூனிசம் என்கிற பேய் மேலும் யதார்த்தமானது. ரஷ்யப் புரட்சியின் அய்ந்தாவது ஆண்டு நிறைவின் போது அய்ரோப்பவின் பிற பகுதிகளில் புரட்சிகர சாத்தியப்பாடுகள் பலனளிக்காத நிலையில், பாசிசம் இத்தாலியில் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

அய்ரோப்பாவில் பாசிசம் தொடங்கியபோதே, அது ஒரு சர்வதேச நிகழ்ச்சிப்போக்காக இருந்த அதே வேளை, அது அந்தந்த நாடுகளில் இருந்த அந்தந்த வரலாற்றுரீதியான, சமுதாயரீதியான நிலைமைகளாலும் வடிவமைக்கப்பட்ட தேசியத் தனித்தன்மைகளை வெளிப்படுத்தியே தீரும் என்பதும் தெளிவாகியிருந்தது. ஜெர்மனியில் பாசிசம் தோன்றியபோது அது ஏற்கெனவே தன்னை அறிவித்துக் கொள்கிற ஒரு புதிய பெயரை –நாஜிசம் அல்லது தேசிய சோசலிசம் (தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் தொழிலாளர் கட்சி என்றுதான் ஹிட்லரின் கட்சி அழைக்கப்பட்டது) – என்ற பெயரைப் பெற்றிருந்தது. நிச்சயமாக இந்தியாவில் எவரும் இப்போது, இருபதாம் நூற்றண்டின் முதல் பாதியில் நாம் கண்ட அய்ரோப்பிய பாசிச முன்மாதிரிகளின் அச்சு நகலைப் பற்றி பேசிக்கொண்டிருப்பதில்லை. இந்தியாவில் இன்று மார்க்சியப் பகுப்பாய்வு, இந்தியாவின் தனித்தன்மைகளையும் அதே போல வரலாற்றில் காணப்பட்ட அனைத்து பாசிசங்களுக்கும் பொதுவானவையாக இருந்த, தெள்ளத் தெளிவாக தெரியும் அடிப்படையான அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த நோக்கு நிலையிலிருந்து சிபிஐ (எம்) கட்சி சுற்றுக்கு விட்டுள்ள குறிப்பைப் பரிசீலிப்பது நிச்சயமாக பொருளுள்ளதாக இருக்கும்.

ஆர்.எஸ்.எஸ்., ஒரு பாசிச சக்தி என்பது இந்தியாவிலும் உலகெங்கிலுமுள்ள பரவலான முற்போக்கு அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்துடன் சி.பி.அய் எம் உடன்படுகிறது. அக்கட்சி சுற்றுக்கு விட்டுள்ள குறிப்பிலிருந்து தெரிவது என்னவென்றால், ஆர்.எஸ்.எஸ்., அது தோன்றிய போதிலிருந்தே தனது கருத்தியல் அடிப்படைகள், ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைக் கட்டமைத்தல், செயல்படும் முறை ஆகியவற்றைப் பொருத்தவரை இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் நாம் பார்த்த அய்ரோப்பிய இத்தாலிய, ஜெர்மானிய பாசிசத்திலிருந்து பெருமளவில் கடன் வாங்கிக் கொண்டவையாகும். ஜெர்மனியில் நாஜிகள், யூதர்களை உள்நாட்டிலுள்ள எதிரிகளாக அடையாளப்படுத்தியது போல, இந்தியாவில் முஸ்லிம்களை உள்நாட்டு எதிரிகளாக ஆர்.எஸ்.எஸ் அடையாளப்படுத்துகிறது. காலனிய ஆட்சியின் கீழிருந்த இந்தியா, முதல் உலகப்போருக்குப் பிந்தைய இத்தாலி போன்றதாகவோ, ஜெர்மனி போன்றதாகவோ இருக்கவில்லை என்பது வேறு விஷயம். இத்தாலியிலும் ஜெர்மனியிலும் பாசிஸ்டுகள், அவர்கள் தோன்றிய சில ஆண்டுகளுக்குள் அதிகாரத்துக்கு வந்தனர். ஆனால் இந்தியாவிலோ அவர்கள் (ஆர்எஸ்எஸ்) சுதந்திரப்போராட்ட காலகட்டத்திலோ அல்லது அரசமைப்புச் சட்ட வகைப்பட்ட இந்தியக் குடியரசின் முதல் பத்தாண்டுகளிலோ விளிம்பு நிலைச் சக்தியாகவே இருந்தனர்.

ஒரு நீண்டகாலம் தனது அமைப்பைக் காப்பாற்றி வைத்துக்கொண்டிருந்துவிட்டு, மாற்றமடைந்து வரும் சமூக-அரசியல் இயங்குவிசைக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு, நயவஞ்சகத்துடன் இந்தியக் குடியரசின் கட்டமைப்பு வலைப்பின்னலுக்குள் ஊடுருவி, இன்று அதன் மீது தனது கட்டுப்பாட்டையும் ஆதிக்கத்தையும் செலுத்தும் பாசிசப்போக்கான ஆர்.எஸ்.எஸ்ஸை போன்ற ஓர் எடுத்துக்காட்டை உலகில் வேறெங்கும் காண முடியாது. ஒரு பாசிச சக்தி, அரசியல் அதிகாரத்தின் மீது தனக்கு அதிகரித்துவரும் இறுக்கமான பிடியை எப்படிப் பயன்படுத்தப்போகிறது? -தனது பாசிசச் செயல்திட்டம் முழுவதையும் கட்டவிழ்த்துவிட்டு அதை நடைமுறைப்படுத்தப்போகிறதா? அல்லது நிரந்தரமாகவே முதலாளித்துவ ஜனநாயகத்துடன் இணங்கிப்போகும் அதேவேளை தனக்குத்தானே உருவாக்கிக் கொண்டுள்ள விளையாட்டு விதிமுறைகளின்படி செயல்படப்போகிறதா? அது தனது வாழ்வின் ஒரு நூற்றாண்டுகால வாழ்வில், அதுவும் குறிப்பாக கடந்த நாற்பதாண்டுகளில் எழுச்சி, வீழ்ச்சி, செயல்தந்திர வகைப்பட்ட பின்வாங்குதல்கள் மூலோபாய வகைப்பட்ட முன்னேறுதல்கள் ஆகியவற்றின் வழியாக அது நம்மை வியக்கவைக்கும் வகையில் எழுச்சி பெற்றுத் தன்னை வலுப்படுத்திக் கொண்டுள்ளதைப் பார்க்கும் பொழுது எவருக்கும் அதைப்பற்றிய கடுகளவு சந்தேகமும் இருக்க முடியாது.

அத்வானியின் இரத யாத்திரையின் மூலம், ராமஜென்ம பூமிக்கான இயக்கத்தை வளர்த்து நாளடைவில், 1992 டிசம்பர் 6 அன்று பாபர் மசூதியை இடித்துத் தள்ளிய நிகழ்ச்சி, சங் பரிவாரத்தின் அப்பட்டமான பாசிச செயல் முறையை தெள்ளத் தெளிவாகப் பார்க்கும் வாய்ப்பை நமக்கு கொடுத்தது. அது வெறும் மதவாதமோ அல்லது அடிப்படைவாதமோ, வெறித்தனத்துடன்

வலியச்சென்று நடத்திய தாக்குதல் மட்டுமோ அல்ல. இந்து மேலாதிக்கத்தின் அடிப்படையில் இந்தியாவின் அடையாளத்தை மறுவரையறை செய்வதற்கான முயற்சியாக இருந்ததுடன், இந்து இராஷ்டிரம் பற்றிய கற்பனையையும் அது பற்ற வைத்தது. அது இந்தியாவின் பன்முகத்தன்மை, அரசமைப்பின் அடிப்படையில் கட்டப்பட்ட குடியரசு ஆகியவற்றுக்கான அச்சுறுத்தல் என்று சிபிஐ (எம்-எல்) அடையாளப்படுத்தியது. தோழர்கள் வினோத் மிஸ்ரா, சீத்தாரம் யெச்சூரி ஆகிய இருவருமே ஆர்.எஸ்.எஸ்.இன் திட்டத்தைப்பற்றி விரிவாக எழுதியதுடன் அந்தத் திருப்பு முனையின் கருத்தியல்-அரசியல் தாக்கத்தைப் பற்றிய எச்சரிக்கை கொள்ளுமாறு இடதுசாரி, முற்போக்கு சக்திகளுக்கு கூறினர். முற்போக்கு கல்வியாளர்களான தபன் பாசு, சுமித் சர்கார், பிரதீப் தத்தா, தனிகா சர்கார், சம்புதா சென் உள்ளிட்டோர், ஆர் எஸ்எஸின் பாசிச சதித்திட்டம் பற்றி 'காக்கி அரைக்கால் சட்டையும் காவிக்கொடியும்' என்ற பெயரில் அறிவார்ந்த வெளியீடுகளைக் கொண்டு வந்திருந்தனர்.

பாபர் மசூதி இடித்துத் தகர்க்கப்பட்ட பின் பாஜக குறுகிய காலமே தனிமைப்பட்டிருந்தது. அய்ந்தாண்டுகளுக்குள் அனைத்திந்திய அளவிலான கூட்டணியை அதனால் திரட்ட முடிந்தது. இருபதாம் நூற்றாண்டு முடிந்து இருபத்தியோராவது நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் இந்தியா ஏற்கெனவே தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் கீழ் வந்திருந்தது. அய்ந்தாண்டு காலம் முழுமையாக ஆட்சி புரிந்த, காங்கிரஸ் அல்லாத முதல் கூட்டணி அதுதான். 1999ஆம் ஆண்டில் கிரஹாம் ஸ்டூவர்ட் ஸ்டெய்ன்சஸ் என்ற கிறிஸ்தவ மதப் பரப்புரையாளரும் அவருடைய இரு மகன்களான பிலிப்பும் திமோத்தியும் தாரா சிங்காலும் அவனது குழுவினராலும் சித்திரவதை செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டதும், மூன்றாண்டுகளுக்குப் பிறகு குஜராத்தில் நடந்த முஸ்லிம் விரோத இன அழிப்புச் செயல்களும் சங்பரிவாரம் கட்டவிழ்த்துவிட்டிருந்த செயல் திட்டம் பற்றிய அழுத்தமான செய்திகளை அனுப்பின. நரேந்திர மோடி அரசாங்கத்தால் மேற்பார்வையிடப்பட்ட குஜராத் படுகொலைகள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பரவலான கண்டனத்துக்குள்ளாகி 2004 தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தோல்வியை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகித்தது என்றாலும் ஆர்.எஸ்.எஸ். –பாஜக அமைப்பு நரேந்திர மோடி மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மறுத்தது. இது, சங் பரிவாரம் இந்து இராஷ்டிரத்தை அமைக்கும் தனது குறிக்கோளை நோக்கி அடுத்த பெரும் பாய்ச்சலைச் செய்யத் தயாராக உள்ளது என்பதைத் தெளிவாக்கியது.

அய்க்கிய முற்போக்குக் கூட்டணி இருமுறை முழு ஆட்சிக்காலத்தையும் நிறைவு செய்திருந்தது என்றாலும், பாஜக குஜராத்தில் தன்னை வலுப்படுத்திக் கொண்டது. 'துடிப்பான குஜராத்' என்றழைக்கப்பட்டதும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுவதுமான முதலீட்டாளர்கள் உச்சி மாநாடுகள் வாயிலாக இந்தியாவின் கார்ப்பரேட் முதலாளிகள் மோடியைச் சுற்றி அதிகரித்த அளவில் அணி திரண்டனர். இந்தியக் கார்ப்பரேட்டுகளின் தீர்மானகரமான ஆதரவுடன்-டாட்டா குழுமமும்கூட அதானி-அம்பானி கூட்டிசையில் சேர்ந்து கொண்டதும்- மோடியை டெல்லிக்கு (ஒன்றிய அரசாங்கத்திற்கு) கொண்டுவர வேண்டும் என்ற கூச்சல் பெருகியது. 2014ல் மோடி ஆட்சிக் காலமும் தொடங்கிவிட்டது. கார்ப்பரேட் சக்திகளும் வகுப்புவாத சக்திகளும் ஒன்றிணைந்த இந்தப் பயணப்பாதையை மறக்காமல் இருப்பது முக்கியம்.

மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியாவை இந்து மேலாதிக்க பாசிச ஒழுங்கிற்கு உட்படுத்த வேண்டும் என்ற சங்கிகளின் நீண்டகால நிகழ்ச்சி நிரலை முறையாகவும் விரைவாகவும் செயல்படுத்துவது, நவீன தாராளமய நெருக்கடி எவ்வளவுதான் கூர்மையாக இருந்த போதிலும் அதைவிடவும் பாசிசப் பேரழிவு திட்டத்தின் பாதையில் இன்னும் நிறைய வரவிருக்கிறது என்பதை நமக்குச் சொல்கிறது.

"இந்து ராஜ்யம் என்பது மெய்யானதாகி விட்டால், அது சந்தேகத்துக்கு இடமின்றி இந்த நாட்டுக்குப் பேரழிவாக அமையும்" என்று ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்கு முன்பே அம்பேத்கர் நம்மை எச்சரித்தார். இதுவே அவரின் உன்னதமான தீர்க்கதரிசன கூற்று. சட்டங்களுக்குத் திருத்தம் கொண்டுவருவது, சட்டம், நீதி ஆகியவற்றின் கட்டுக்கோப்பையே மாற்றும் வகையிலும், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வை முற்றிலுமாக மீறும் வகையிலும் நமது குடியரசை நிர்வகிக்கும் நிறுவனங்கள், நிலைமைகள் ஆகியவற்றின் கட்டமைப்பு முழுவதற்கும் நாசத்தைக் கொண்டுவந்து ஜனநாயகத்தை அழிப்பதற்கும் மக்களின் உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றை அரித்துப்போகச் செய்வதற்கும் இந்த (மோடியின்) அரசாங்கம் அனைத்தையும் செய்து வருகிறது. இத்துடன் முஸ்லிம் சமுதாயத்தையும், சமுதாயத்திலுள்ள பலவீனமான பிரிவினர், கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருப்பவர்கள் மீதும் அரசு ஆதரவுடன் நடத்தப்படும் வெறுப்பு, வன்முறை ஆகியவற்றைச் செய்பவர்களுக்குத் தண்டனை இல்லாமல் செய்வது ஆகியவற்றையும் சேர்த்துக் கொண்டால் நமது ஜனநாயகக் குடியரசுக்கு அரசமைப்பு வகையில் ஏற்படுத்தப்பட்ட அஸ்திவாரத்தின் மீது முன்னுதாரணமற்ற வகையில் அன்றாடம் தாக்குதல் நடத்தப்படுவதைப் பற்றிய சித்திரம் நமது கண்களுக்குப் புலப்படுகிறது. புதிய அரசமைப்புச் சட்டம் வேண்டும் என்று வெளிப்படையாகப் பேசும் குரல்கள் பலதரப்புகளிலிருந்து வருகின்றன. இந்திய அரசமைப்புச்சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட 75 ஆண்டு நிறைவையொட்டி நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தின்போது உள்துறை அமைச்சரும்கூட அம்பேத்கரைப் பற்றிய இழிவான கருத்துகளைக் கூறினார்.

இந்தியாவில் இன்னமும் தேர்தல்கள் நடக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், தேர்தல் ஆணையம் அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுவதிலிருந்து வாக்குகள் எண்ணப்படுவது வரை, தேர்தல் நிகழ்முறை முழுவதும் மேலும்மேலும் வெளிப்படைத் தன்மையற்றவையாகவும் தன்னிச்சையாக செய்யப்படுபவையாகவும் ஆகிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்கும் போது, முற்றுகையிடப்பட்டுள்ள இந்திய ஜனநாயகத்துக்கு தேர்தல்கள் நடப்பதே பாதுகாப்பானதாக ஆகிவிட முடியுமா? ஹிட்லரும்கூட தேர்தல் பாதையில்தான் ஆட்சிக்கு வந்து பிறகு படிப்படியாக எதிர்க்கட்சியினர் அனைவரையும் சட்டரீதியற்றவர்களாக்கி 99% வாக்குகளைப் பெற்று நிரந்தரமான சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்தினான் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்தியாவில் தொடர்ந்து அம்பது ஆண்டுகள் ஆட்சி புரியப்போவதாக அமித்ஷா அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியில் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு எதையும் செய்யும் பாஜக தீய முயற்சிகளில் ஈடுபட்டு வரும் ஏராளமான நிகழ்வுகளை ஏற்கெனவே பார்த்துள்ளோம். இந்தியாவில் தேர்தல்களை கேலிக்கூத்தாகவும் உலகின்பார்வைக்கு ஒரு காட்சிப் பொருளாகக் காட்டவும் உள்நாட்டில் (தன்னை) சட்டரீதியானவையாக ஆக்கிக்கொள்வதற்கும் தேர்தலை பயன்படுத்துவது அதிகரித்து வருகின்றது.

பாஜக அதன் அரசியல் பயணத்தில், இது வரை பல கூட்டாளிகளையும் அதன் பயணத்தை சாத்தியப்படுத்துபவர்களையும் கண்டறிந்துள்ளது உண்மைதான். அது தனது தலைமையை ஏற்றுக்கொண்ட கூட்டணிக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதுடன் நவதாராளவாத நிகழ்ச்சிநிரல் அடிப்படையிலும் மென்மை இந்துத்வா அடிப்படையிலும் கூட ஆதரவைப் பெறுகிறது. கருத்து வேறுபாடு கொண்டவர்களை ஒடுக்குதல், இஸ்லாம் மதத்தை தீயசக்தியாக சித்தரித்தல், முஸ்லிம்களுக்கும் இதர சிறுபான்மைக் குழுக்களுக்கும் விளிம்புநிலையிலுள்ள குழுக்களுக்கும் எதிராக வெறுப்பையும் வன்முறையையும் தூண்டும் கொடிய பிரசாரங்களைச் செய்தல், குடிமை உரிமைகள், ஜனநாயக உரிமைகள், ஜனநாயகச் செயல்பாடுகளுக்கான வெளிகள் ஆகியவற்றின்மீது இந்தியாவின் பொது உரையாடலில் இன்னமும் கொஞ்சம் கூருணர்வும் எதிர்ப்புக் குரல்களும் இருக்கின்றன. நமது அரசமைப்புச் சட்டம் என்பது ஜனநாயகத்தன்மையற்ற மண் மீது தூவப்பட்ட உரம் என்று அம்பேத்கர் வரையறுத்ததில் வியப்பொன்றும் இல்லை. எனவே பாசிசத்தின் தாக்குதல் அதிகரித்து வரும் இந்த நிலைமை, அதை எதிர்த்துத் தடுத்து நிறுத்தும் இயக்கத்தைக் கட்டுவதையும் ஜனநாயகத்தைக் காப்பதில் சிறிதும் முரணற்ற வகையில் அர்ப்பணிப்பு கொண்ட காவலர்களாக இருப்பதையும் கம்யூனிஸ்டுகளுக்கு அவசரமான, முக்கியமான கடமையாக ஆக்குகிறது.

சிபிஐ(எம்) கட்சியின் அரசியல் தீர்மானம், மோடி அரசாங்கத்திடம் குறிப்பிட்ட சில நவ-பாசிச தனித்தன்மைகள் இருப்பதை ஏற்றுக்கொள்கிறது; அது சுற்றுக்கு விட்டுள்ள குறிப்பு, இந்த நவ-பாசிசத் தனித்தன்மைகளைத் தடுத்து நிறுத்தாவிட்டால் அவை முழு அளவிலான 'நவ பாசிச'மாக வளர்ச்சியடையும் என்றும் சொல்கிறது. இந்தக் குறிப்பு, மோடி அரசாங்கத்தைப் பற்றிய தனது வரையறைக்கு இன்னும் கூடுதலான சில தகுதிகளைச் சேர்க்கிறது. அதாவது மோடி அரசாங்கம், பாசிசத்தின் மூலத்திலுள்ள சில கூறுகளைக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறது. சிபிஅய்(எம்) அறிக்கை, 'மூல முதல் நவ-பாசிசத்தின் (proto neo-fascism) வடிவங்கள்' எனும் சொற்களைப் பயன்படுத்தி கூடுதலான தனித்தன்மை நிலைகளை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இதன் மூலம், இந்த 'மூலமுதல் (proto) வடிவங்கள்' முழுமையான 21ஆம் நூற்றாண்டின் பாசிசமாக முதிர்ச்சியடைவதற்கு இன்னமும் நேரம் எடுத்துக்கொள்ளும் என்பதைக் குறிப்பிடுகிறது. இதை தெரிவிப்பதற்காக மூன்றுமுறை கிளாசிக்கல் பாசிசம் (classical fascism) என்பதற்கு பதிலாக இந்த மூலமுதல் வடிவங்கள் எனும் சொற்றொடரைப் பயன்படுத்தியிருக்கிறது.

மோடி அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவது என்று முடிவு செய்யப்பட்ட பிறகு, பாசிச அபாயத்தின் அளவையும் தீவிரத்தையும் மதிப்பிடுவது மட்டுமே ஒரே ஒரு பிரச்சினையாக இருக்கும்போது, யதார்த்தமாக ஏற்கெனவே நிகழ்ந்தவற்றையும், இப்போது ஒவ்வொரு பகலும் இரவுமாக நம் கண்முன்னால் நடப்பவற்றையும் புறக்கணித்துவிட்டு முஸோலினியின் இத்தாலி, ஹிட்லரின் ஜெர்மனி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் இன்னும் எஞ்சியுள்ள ஜனநாயகத்தின் அளவைக்கொண்டு ஆறுதல் அடையும் ஆடம்பரத்தை கம்யூனிஸ்டுகள் நாடமுடியுமா? இந்தியாவில் பாசிசத்தின் வளர்ச்சி, மெதுவாகவும் நீடித்ததன்மை கொண்டதாகவும் இருந்து வந்துள்ளது என்றால், அதற்கு முக்கியக் காரணம் இந்தியா பரந்து விரிந்த நாடாக இருப்பதும், அதன் உள்ளார்ந்த பன்முகத்தன்மையும்தான். அந்தப் பன்முகத்தன்மையை 'ஒரே தேசம்' என்ற வாய்ப்பாட்டுடன் இடித்துத் தள்ளுவதில் மோடி அரசாங்கம் ஒரு நொடியைக்கூட வீணாக்குவதில்லை.

சிபிஐ (எம்) சுற்றுக்கு விட்டுள்ள குறிப்பு, இந்தியா ஒரு பாசிச அரசு அல்ல என்று கூறுகிறது. ஆம், இந்திய அரசு முழுமையான பாசிசமாக மாறிவிட்டது என்று எவரும் கூறியதில்லை; ஆனால் இந்திய அரசின் உறுப்புகளிலிருந்து (நாடாளுமன்றம், நீதித்துறை, நிர்வாக இயந்திரம், இராணுவம்) பாசிசத்திற்கான எதிர்ப்பு மிகவும் பலவீனமானதாக உள்ளது என்பதுடன்

இந்தியாவிலுள்ள ஜனநாயகத்தில் இன்னும் எஞ்சியுள்ள கூறுகளை அல்லது உள்ளுறை ஆற்றல்களை ஒழித்துக்கட்டுவதற்கான யதார்த்தமான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் ஒரு பொழுதாவது புறக்கணிக்க முடியுமா? இந்தக் காரணத்தால்தான் அம்பேத்கரும், அரசமைப்புச் சட்டமும், சுதந்திரப் போராட்ட மரபால் அறிவூட்டப்பட்ட அரசமைப்பு பார்வையின் ஆற்றல்மிக்க வெளிப்பாடாக அமைந்து நமக்கு ஊக்கமளிக்கிற அரசமைப்புச்சட்ட முகப்புரையும் ஆர்.எஸ்.எஸ். –பாஜகவுக்கு மேலும்மேலும் எரிச்சலூட்டிக் கொண்டிருக்கின்றன. பாசிசத் தாக்குதலுக்கு உள்ளாகும் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அரசமைப்புச் சட்டத்தைச் சுற்றி அணி திரண்டு வருகின்றனர். பாகுபாடு காட்டுகிற, மக்களைப் பிளவுபடுத்துகிற புதிய குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து டெல்லியிலுள்ள ஷாஹீன் பாக் பகுதியில் நடந்த போராட்டம் தொட்டு, சமுதாயத்தில் தங்களுக்கு கண்ணியம் வேண்டும் என்பதற்காக தலித்துகள்-பழங்குடி மக்கள் – பிற்படுத்தப்பட்ட சாதியினர் ஆகியோர் நடத்தும் போராட்டம், கார்ப்பரேட் கொள்ளைகளுக்கு எதிராக தீவிரமடைந்து கொண்டிருக்கும் விவசாயிகள்-தொழிலாளர் போராட்டம் வரை, அவை எல்லாமே ஜனநாயகத்தைக் காப்பாற்றும் ஆயுதமாக அரசமைப்புச்சட்டத்தை மறுகண்டுபிடிப்பு செய்துவருவதை பார்க்கிறோம். எவ்வித எதிர்ப்புமின்றி அதிகாரத்தின் தலைமைப் பீடத்தில் பாசிச சக்திகள் தங்களை வலுப்படுத்திக் கொண்ட பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகும், வளர்ந்துவரும் பேரழிவுச் சக்திக்கு வரலாற்றுரீதியாக உள்ள பெயரைச் சொல்வதற்கு இந்தியக் கம்யூனிஸ்டுகள் இன்னும் நீண்டகாலம் காத்திருக்க வேண்டுமா?

பாப் டைலானின்( Bob Dylan) புகழ்பெற்ற பாடலின் பொழிப்புரையாக நாம் இதைக் கூறலாம்: “அவர்களை பாசிஸ்டுகள் என்று நாம் அழைப்பதற்கு முன் எவ்வளவு மிக அதிகமான சேதங்களை நாம் அனுபவிக்க வேண்டும்”. இந்தக் கட்டத்தில் பாசிச அபாயத்தைக் குறைத்து மதிப்பிடுவதும், பாசிச அபாயத்தை நவதாராளவாதம், எதேச்சாதிகாரம் என்ற பொதுவான வகைப்பாடுகளிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதில் தெளிவின்மையைக் காட்டுவதும் கம்யூனிஸ்டுகளின் தேர்தல் பலத்தையும், தார்மிக ஆளுமையையும் அரித்துப்போகவேச் செய்யும். இதற்கு நேர்மாறாக, பாசிசத்தை எதிர்க்கும் சவாலை கம்யூனிஸ்ட்கள் கையேற்றுக் கொண்டால், சுதந்திர போராட்டத்தின் முற்போக்கு மரபையும், சமூக சமத்துவத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்து ஜனநாயகத்திற்கான அரசியலமைப்பு அடித்தளத்தை அமைத்த அம்பேத்கரின் தீவிர பங்களிப்பையும் முன்னிறுத்தி, தொழிலாளர்கள், உழைக்கும் மக்கள்' படித்த பிரிவுகள் ஆகியோரின் முக்கிய கவலைகள் அனைத்தையும் ஒன்றிணைக்க துணிச்சலான முன்முயற்சிகளை மேற்கொண்டு, டிரம்ப் நிர்வாகத்திடம் மோடி அரசு வெளிப்படையாக சரணடைந்து வரும் இக்கட்டான இக்காலகட்டத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய பதாகையை உயர்த்தினால், கம்யூனிஸ்ட் இயக்கம் சூழ்நிலையை தலைகீழாகத் திருப்பி பாசிச சக்திகளை பின்னுக்குத் தள்ள முடியும்.

வரலாற்றுரீதியாக சிபிஐ(எம்) கட்சியின் வலுவான கோட்டைகளாக இருந்த கேரளாவிலும் மேற்கு வங்கத்திலும் அக்கட்சி எதிர்கொள்ளும் அரசியல், தேர்தல் களங்களில் உள்ள சிக்கல்களை நம்மால் புரிந்துகொள்ள முடியும். இந்த இரு மாநிலங்களிலும் பாசிசத்தின் வருகையை அடையாளப்படுத்தி, அதற்குப் பெயரிடுவதில் அக்கட்சிக்குள்ள சிக்கலான நிலைமை, அந்த இரு மாநிலங்களிலும் அக்கட்சி எதிர்கொள்ளும் உடனடி தேர்தல் சூழ்நிலைமைகளால் தீர்மானிக்கப்பட்டுவிடக்கூடாது என்று நம்மால் நம்பிக்கை கொள்ளவே முடியும். கேரளாவில் சிபிஐ (எம்), மாநில ஆட்சி அதிகாரத்தில் இருந்தும்கூட, அக்கட்சி நாடாளுமன்றத் தேர்தல்களில் அடுத்தடுத்து தோல்வி கண்டதும், மேற்கு வங்கத்தில் அக்கட்சிக்குத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் சரிவும் கவலைக்குரியவை. ஆனால் மேலும் தொந்தரவு அளிப்பது என்னவென்றால், சிபிஐ (எம்) கட்சிக்கிருந்த வாக்காளர்களில் ஒரு பகுதியினரும், ஒரு காலத்தில் அக்கட்சியின் தலைவர்களாக, அமைப்பாளர்களாக இருந்தவர்களும்கூட தொடர்ந்து பாஜகவிடம் புலம்பெயர்ந்து சென்றதுதான். அக்கட்சி தனது சுதந்திரமான வளர்ச்சிக்கும் அது வகிக்கும் பாத்திரத்திற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது சரிதான். ஆனால், இந்த முன்னுரிமையை, அதைப் போலவே முக்கியமானதாக உள்ள, ஒரு பரந்த பாசிச எதிர்ப்பு சக்திகளின் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு எதிரானதாக வைக்கலாமா? அக்கட்சிக்கு தற்போது லோக்சபாவில் உள்ள நான்கு இடங்களில், மூன்று இடங்கள் இந்தியா கூட்டணியின் பகுதியாக தமிழ்நாட்டிலிருந்தும், ராஜஸ்தானிலிருந்தும் கிடைத்துள்ளன. எந்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சி யாவது இன்றுள்ள மிக முக்கியமான அரசியல் பிரச்சினையை குழப்பமடையச் செய்வதன் மூலம் உண்மையிலேயே தன்பலத்தையும் பாத்திரத்தையும் வலுப்படுத்திக்கொள்ள முடியுமா?

நவீன இந்தியாவின் கடுஞ்சோதனையான இந்த தருணத்தில், கம்யூனிஸ்ட் இயக்கத்தின் எந்தவொரு பிரிவும் தடுமாறாமல் இருக்குமென்று இன்னமும் நம்புகிறோம். அப்போதுதான் பாசிசம் தனது முழுச் சீற்றத்தையும் கட்டவிழ்த்து விடுவதற்கு முன், வளர்ந்து வரும் பாசிசம் என்ற பேரழிவிலிருந்து இந்தியாவைக் காப்பதற்கு பாசிச எதிர்ப்பு இயக்கத்தில் கம்யூனிஸ்ட் நீரோட்டத்தை நாம் அனைவரும் சேர்ந்து வலுப்படுத்த முடியுமென்றும் நம்புகிறோம்.

# மோடி ஆட்சியில் திறந்தவெளி கழிப்பிடம் ஒழிந்து விட்டதா?



-பாலசுந்தரம்

2014 அக்டோபர் 2 அன்று, வெளிநாட்டு ஊடகங்களையும் கொண்ட உலகமகா விளம்பர கொண்டாட்ட விழாவில் தூய்மை இந்தியா இயக்கத்தை தொடங்கினார். 2019க்குள் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத இந்தியாவை உருவாக்குவது இலக்கு என்றும் அறிவித்தார். அவரது முதல் சுதந்திர நாள் செங்கோட்டை உரையில் இதை அறிவித்தார். இதுதான் அவரது முதல் பெரும் திட்டமாகும்.

திறந்தவெளி கழிப்பிடம் 2019ல் முற்றிலுமாக ஒழிக்கப்படும் என்று அறிவித்த அரசாங்கம், இலக்கை 2025க்கு தள்ளி வைத்திருக்கிறது. 5 ஆண்டுகளுக்குள் ஒழிப்பதாக அறிவித்துவிட்டு மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீட்டியது ஏன்? அரசு இதைப்பற்றி எந்த விளக்கத்தையும் தரவில்லை.

**இந்திய நிலவரம்**

வெட்டவெளியை கழிப்பிடப்பிடமாகப் பயன்படுத்துவதில் உலகில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது. 1954ல் இந்தப் பிரச்சினையை கவனத்தில் எடுத்துக்கொண்ட இந்திய அரசு இதற்கான முயற்சிகளை எடுத்தது. 1981ல், இலக்கில் 1%யே எட்ட முடிந்தது. தொடர்ந்து முழு சுகாதார இயக்கம் உள்ளிட்ட பல முன்னெடுப்புகளை எடுத்தது இந்திய அரசு. 2015ல் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வறிக்கையின்படி, திறந்தவெளிக் கழிப்பிடப் பிரச்சனையால் சுகாதாரம், மருத்துவம், பொருளுற்பத்தி சார்ந்த வகையில், இந்தியாவுக்கு, 12.2 ட்ரில்லியன் ரூபாய் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.9% இழப்பு என்று கூறுகிறது. 2014 முதல், மோடி ஆட்சியில் தற்போதைய தூய்மை பாரதம் இயக்கம் பேசப்பட்டு வருகிறது. 2 லட்சத்து 434 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டுள்ள இந்த இயக்கம் பல்வேறு சாதனைகளை எட்டியுள்ளதாக கூறுகிறது.

30 லட்சத்துக்கு மேற்பட்ட ஊழியர்களும் 12 கோடி பள்ளி, கல்லூரி மாணவர்களும் 6.25 கோடி தன்னார்வலர்கள், 2.5 லட்சம் உள்ளாட்சி அமைப்பு ஊழியர்கள் பல லட்சக்கணக்கான பொதுமக்கள் 50 பிரபலங்கள் இந்த இயக்கத்தில் பங்கு பெற்றுள்ளதாக கூறுகிறது. 10 கோடிக்கும் மேற்பட்ட, வீடுகளுக்கு தனிக்கழிப்பறை (1லட்சத்து 20 ஆயிரம் கோடியில்) கட்டப்பட்டுள்ளதாகவும் கூறுகிறது. 2000-ல் 776 மில்லியன் பேர் (73%பேர்) வெட்டவெளியை கழிப்பிடமாக பயன்படுத்தி வந்ததாகவும் 2022-ல் 157 மில்லியனாக (வெறும் 11%ஆக) குறைந்திருப்பதாகவும் கூறுகிறது. இந்த இயக்கத்தின் பலனாக, கழிச்சல் நோயால் இறக்கும் 3 லட்சம் மரணங்கள் தடுக்கப்பட்டிருப்பதாகவும் (காப்பாற்றப்பட்டிருப்பதாகவும்) பலன்பெற்ற குடும்பம் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு ரூ.50000 சேமித்துள்ளதாகவும் (5 லட்சம் கோடி), 93% பெண்கள் அச்சத்திலிருந்து விடுபட்டுள்ளதாகவும் அய்நா யுனிசெப் அறிக்கையை மேற்கோள்காட்டி ஒன்றிய அரசு பெருமை பேசுகிறது.

கிராமப்புரம், நகர்ப்புரத்துக்கென தனித்தனி நிதி ஒதுக்கீட்டுடன் இரண்டு கட்டங்களாக இயக்கம் தொடங்கப்பட்டது. ஒன்றியமும், மாநிலமும் 60: 40 அளவில் செலவை பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்தியா முழுவதற்கும் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் 2019ம் ஆண்டிலேயே, 33 மாநிலங்களும் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்களும் (66%) (இந்தியாவில் மொத்தம் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன) வெட்டவெளி கழிப்பிடத்திலிருந்து விடுபட்டு விட்டதாகவும் மோடி ஆட்சி கூறுகிறது. 2019க்குப் பிறகு நடந்துவரும் தூய்மை பாரதம் (இவர்களுக்கு இந்தியா பிடிக்காது) திறந்தவெளி கழிப்பிட ஒழிப்பை பாதுகாக்க, திட, திரவ கழிவு மேலாண்மையை நடத்திவருவதாகவும் அரசின் அறிக்கைகள் கூறுகின்றன.

**தமிழ்நாட்டின் நிலவரத்தைப் பார்ப்போம்**

2019 லேயே 100% வெட்டவெளி கழிப்பிடத்தை அகற்றிவிட்ட மாநிலம் தமிழ்நாடு என்று தூய்மை பாரத அமைச்சகம் கூறுகிறது.

தமிழ்நாடு அரசும் இதை வழிமொழிகிறது. 1.25 கோடி கிராமப்புர குடும்பங்கள் உள்ள தமிழ்நாட்டில் இதுவரை 57 லட்சம் தனிவீட்டுக் கழிப்பறைகள் (6,840 கோடியில்) கட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதாவது 3 கோடியே 12 லட்சம் கிராமப்புர மக்கள் தொகையில் 2 கோடி 28 லட்சம் பேர் தனி வீட்டுக் கழிப்பறை வசதி பெற்றுவிட்டனர் என்பது அறிக்கைகள் சொல்லும் செய்தி.

ஆனால், 90% பெண்கள் இன்னும் வெட்ட வெளியை கழிப்பிடமாகப் பயன்படுத்திவரும் நிலைதான் காணப்படுகிறது. அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் மார்ச் 8 உழைக்கும் பெண்கள் பேரணிக்காக கிராமம் தோறும் பெண்களை சந்தித்த பெண்கள் கழகத் தலைவர்கள் இந்த விவரத்தை சேகரித்துள்ளனர். இருட்டான அதிகாலையிலும் இருட்டிய மாலையிலும் முள் காடுகளையும் புதர்களையும் தோப்பு துரவுகளையும் தேடி அலைவது அன்றாட துயரம், வலி என்பதை பகிர்ந்து கொண்டனர். மோடியின், தனிவீட்டுக் கழிப்பறை பற்றி கேட்டபோது, அனைத்து தடைகளையும் கையூட்டுகளையும் தாண்டி கட்டப்படும் இந்த கழிப்பறையில் உள்ளே நுழைந்து திரும்பமுடியாது. “ஊருக்கு 10, 15 இருக்கும் அந்த கழிப்பறைகள், பேருக்குதான் கழிப்பறை. அனைத்தும் செத்துக்கிடக்கின்றன” என்றனர். “ரூ. 12000ல் பயன்படுத்ததக்க கழிப்பறையை கட்டமுடியாது” என்கின்றனர். மகிழ்ச்சியுடன் மாதம் ரூ.1000 மகளிர் உரிமைத்தொகை பெறுவதாகச் சொல்லும் பெண்களுக்கு அச்சமின்றி கழிப்பறை செல்லும் மகிழ்ச்சி இல்லை. மாதம் ரூ.1000 மேற்படிப்பு உதவித்தொகை பெறும் கல்லூரிப்பெண்கள் காலை வேளைகளில் கருவேலங்காடுகளை நோக்கி அலைவது அன்றாட காட்சிகளாக உள்ளன. தமிழகத்தையே உலுக்கிய செய்தி, 2022 ஜூன் 5 அன்று, கடலூர் மாவட்டம், சி.குச்சிப்பாளையத்துக்கு அருகிலுள்ள கெடிலம் ஆற்றங்கரை ஓரம் கழிப்பிடம் தேடிச்சென்ற இளம் மாணவிகள் 7 பேர் (10 முதல் 18 வயது வரை) ஆற்றில் வெட்டப்பட்டிருந்த 15 அடி பள்ளத்தில் மூழ்கி இறந்தனர். இதற்குப் பிறகும் ஆற்றங்கரை, குளத்துக்கரை, ரெயில்வே பாதைகளிலும் முள்புதர்களையும் நம்பித்தான் அதிகமான பெண்கள் இருக்கும் நிலையில், வெட்டவெளி கழிப்பிடத்தை அறவே நீக்கிவிட்டோம் என்று சொல்வது முறையா?

மார்ச் 8 உழைக்கும் பெண்கள் தஞ்சை பேரணியில் திரண்ட கிராமப்புர, நகர்ப்புர உழைக்கும் பெண்கள், திறந்தவெளி கழிப்பிடத்தை ஒழிக்க வேண்டும், அதற்காக ஒன்றிய, மாநில ஆட்சிகளை வலியுறுத்திப் போராடுவோம் என்று முழங்கினர். பெண்களுக்கு பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வரும் திமுக ஆட்சி செய்து வரும் தமிழ்நாட்டில் திறந்தவெளி கழிப்பிடத்தை ஒழிப்பது சமூகநீதி பயணத்தில் முக்கியமான மைல்கல் என்றும் அறிவித்தனர். “அச்சமில்லை அச்சமில்லை” என்று பாரதி பாடிய தமிழ்நாட்டில், பெண்விடுதலைக்காக பெரியார் முழங்கிய தமிழ்நாட்டில், பெண்கள் ’அச்சத்திலிருந்து விடுதலை பெற’ முதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதே பெண்களது கோரிக்கை. சர்வாதிகார மோடி ஆட்சியை எதிர்த்து, மாநில உரிமைகளுக்காக துணிச்சலாக போர் நடத்திவரும் முதல்வர், பெண்களது உரிமைக்காகவும் போராட வேண்டும்.

தூய்மை பாரதத்தின் 10 ஆண்டுகளை அக்டோபர், 2024 ல் கொண்டாடிய மோடி, சில சாதனைப் பட்டியல்களை அறிவித்தார். 29.21 லட்சம் நிகழ்ச்சிகளை திட்டமிட்டு 26.44 லட்சம் நிகழ்வுகளை வெற்றிகரமாக முடித்துவிட்டதாகவும் 26.25 கோடி தனி நபர்கள் தூய்மை பாரத இயக்கத்தில் பங்கேற்றிருப்ப தாகவும் பெருமைபடக் கூறியுள்ளார். இந்திய வரலாற்றிலேயே இதுதான் மிகப் பெரிய வெகுமக்கள் இயக்கம், இதுவே மகாத்மா காந்திக்கு செலுத்தும் பொருத்தமான அஞ்சலி என்றும் தனது செய்தியில் கூறியுள்ளார். மோடிக்கு திறந்தவெளி கழிப்பிடத்தை ஒழிப்பதைவிட, இந்தியாவின் விடுதலைப் போராட்டம் ஒரு வெகுமக்கள் இயக்கமே அல்ல; இவர் ஆட்சிக்கு வந்த 2014க்கு பிறகுதான் இந்தியாவில் மாபெரும் வெகுமக்கள் இயக்கம் நடந்துள்ளதாக கூறுவதற்குதான் இந்த இயக்கத்தை பயன்படுத்திக்கொள்கிறார். 2025-26 நிதிநிலை அறிக்கையில் வெறும் 12, 312 கோடி ஒதுக்கியிருப்பதன் மூலம் இதற்கு மூடுவிழா நடத்த தொடங்கிவிட்டனர் என்று தெரிகிறது. திறந்தவெளி கழிப்பிடத்தை ஒழிப்பதாகக் கூறிய மோடி-அமித்ஷா-யோகி கூட்டம் திரிவேணி சங்கமத்தையே திறந்தவெளி கழிப்பிடமாக மாற்றியதுதான் இவர்களது ஒரே சாதனை!

இந்த இயக்கத்திற்கு காந்தியின் கண்ணாடியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கண்ணாடியை அணிந்த காந்தியைதான் காணவில்லை.

# பெண்கள் கழகம் ஓர் அறிமுகம் :

## பெண் விடுதலை இல்லாமல் புரட்சி இல்லை; புரட்சி இல்லாமல் பெண் விடுதலை இல்லை

### அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் (அஇமுபெக)




அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், பெண்களது சமத்துவம், விடுதலை, உரிமைகளுக்காக போராடுவதற்கு பெண்களை திரட்டுகிற அமைப்பாகும்.

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், பெண்கள் இயக்கத்தில், மார்க்சிய நோக்குடன் இடதுசாரி திசை வழியில் இயங்குகிற ஒரு அமைப்பாகும்.

1994 இல் (பிப்ரவரி 12) அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் தனது அமைப்பு மாநாட்டை நடத்தியது. முற்போக்கு பெண்கள் கழகத்தின் பார்வை, கருத்தியல் ஆகியவற்றுடன் ஒத்த அளவில், பல பத்தாண்டுகளாக பல்வேறு மாநிலங்களிலும் இயங்கி வந்த பெண்கள் அமைப்புகளும் ஒன்றிணைந்து அம் மாநாட்டில் அகில இந்திய அமைப்பை உருவாக்கியது.

பெண்கள் விடுதலையும் சமூகத்தின் முழு முற்றூடான கட்டமைப்பு உருமாற்றமும், ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தது என அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் நம்புகிறது.

பால், சாதி, வர்க்கம் அல்லது மதவாதம் அடிப்படையிலான ஒடுக்குமுறை, பாகுபாடு வன்முறை இல்லாத ஒரு ஜனநாயக சமூகத்திற்காக அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் போராடுகிறது.

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் அரசு ஒடுக்கு முறையை தடுத்து நிறுத்துவதில் உறுதியாக உள்ளது. அனைத்து கொடுஞ் சட்டங்களையும் எதிர்க்கிறது. பெண்களுக்கு எதிரான வன்முறை, பாகுபாடுகள் இவைகளுக்கு உடந்தையாக இருக்கும் அரசை பொறுப்பாக்குகிறது.

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், பிற்போக்கு, ஆணாதிக்க தந்தைவழிச் சிந்தனையை எதிர்த்துப் போராடுகிறது; முற்போக்கு, ஜனநாயக பண்பாட்டையும், மதிப்பீடுகளையும் உயர்த்திப்பிடிக்கிறது.

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் அரசாங்கத்திடமிருந்தோ எந்த ஒரு நிதி நிறுவனத்திடமிருந்தோ நிதி பெறுவதில்லை. நம்முடைய உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இடமிருந்து மட்டுமே நம்முடைய நடவடிக்கைகளுக்கு நிதி பெறுகிறது. இந்திய சமூகத்தின் ஒவ்வொரு பெண்கள் பிரிவினர் மத்தியில் இருந்தும் உறுப்பினர்களை கொண்டுள்ளது.

இந்திய பெண்கள் இயக்கத்தில் ஏழை விவசாய பெண்கள், பெண் தொழிலாளர்கள் தலைமைப் பாத்திரம் வகிப்பதை முன்னெடுக்கிறது, வலியுறுத்துகிறது.

#### பால் பாகுபாடு, ஒடுக்குமுறை குறித்து அஇமுபெக நோக்குநிலை

பாலின பாகுபாடு, ஒடுக்குமுறை இவைகள் தொடர்பாக மார்க்சிய நோக்கு நிலையை அஇமுபெக, கொண்டிருக்கிறது. மார்க்சியத்தை உள்ளடக்கமாக அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் கொண்டுள்ளது.

இந்திய சமூகத்தின் புரட்சிகர மாற்றத்திற்கான நம்முடைய போராட்டத்தில் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் பகத்சிங், ஜோதிபா, சாவித்திரிபாய்பூலே, அம்பேத்கர், பெரியார் ஆகியோரது முற்போக்கு கருத்துக்களையும் எழுத்துக்களையும் பின்பற்றுகிறது.

பெண்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறை, ஓரங்கட்டப்படுதலுக்கு ஒரு பொருளாயத அடித்தளம் உள்ளது. பொருளாதார ஒடுக்குமுறையும், சமூக, கலாசார ஒடுக்குமுறையும் தனித்தனியானதல்ல; ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை.

பாலின பாகுபாடு, ஒடுக்குமுறை, வன்கொடுமை தொடர்பான பற்பல குறிப்பான வெளிப்பாடுகளை எதிர்த்துப் போராடுகிற அதேவேளை, ஒட்டுமொத்த ஒடுக்குமுறை சமூகக் கட்டமைப்பையும் மாற்றுவதற்கு நாம் சண்டையிட வேண்டி உள்ளது.

இந்திய சமூகத்தின் அனைத்துப் பிரிவு பெண்களும் ஒதுக்குதல்கள், வன்முறைகளை எதிர்கொள்கிறார்கள். உழைக்கும் வர்க்கத்தில் உள்ள பெண்கள், ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்கள், மதச் சிறுபான்மை பெண்கள், ஒடுக்கப்பட்ட

தேசிய இன பெண்கள், மாற்றுத்திறனாளி பெண்கள் ஆகியோர் கூடுதல் ஒதுக்கல்களையும் வன்முறைகளையும் எதிர்கொள்கிறார்கள்.

ஆண் வாரிசுகளுக்கு தனிச்சொத்தை கொண்டு சேர்ப்பதை உறுதி செய்திட ஒரு ஒடுக்குமுறை அமைப்பு தேவைப்படுகிறது. பெண்களின் பாலுணர்வு, மானுட மறு உற்பத்தி, மட்டு மீறிய உழைப்பு இவைகளைக் கட்டுப்படுத்த இறுகிய சாதிப் பிளவுகள் தேவைப்படுகின்றன.

முதலாளித்துவம் பெண்களை கூலி உழைப்பிற்குள் இழுக்கிறது; அதேவேளையில் கூலியையும் சமூக செலவுகளையும் குறைத்திட குடும்ப பராமரிப்பு சுமையை பெண்கள் மீது திணிக்கிறது.

உலக முதலாளித்துவம் தனக்கு இணக்க மான, மலிவான உழைப்பை தேடுவதற்கு பெண்களை கீழ்மைப்படுத்த, இந்தியாவில் ஏற்கனவே இருக்கும் கட்டமைப்பு, கருத்தியலை விரிவுபடுத்தி பெண் தொழிலாளரை கட்டுப்படுத்தி அடக்கிவைக்கிறது.

இந்திய முதலாளிகள், பெரிய நிலப்பிரபுக்கள், உலக முதலாளிகள், ஏகாதிபத்திய நலன்களுக்குப் பணிபுரியும் இந்திய அரசு, ஆகியன ஆணாதிக்க கட்டமைப்புகள், கருத்தியல்களை வலிமைப்படுத்தி பெண்களை குடும்பத்திலும் சமூகத்திலும் பணி இடங்களிலும் கீழ்ப்படுத்துவதை நிலைநாட்டும் தன்னலத் திட்டத்தைக் கொண்டிருக்கிறது.

ஆகையால் வெவ்வேறான பிற்போக்கு கருத்தியல்கள், நடைமுறைகள், நிறுவனங்களை (கசக்கிப் பிழியும் வரதட்சணை, ஆண் பிள்ளை முன்னுரிமை, பால் தேர்வு கருச்சிதைவு, ஆணவக் கொலைகள், கிராமசாதி பஞ்சாயத்துகள், தலித், பின்தங்கிய சாதிப் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் என்பவற்றை சொல்லலாம்) கடந்த கால நிலப்பிரபுத்துவ எச்சங்களாக அல்லது பின்தங்கிய பாரம்பரியங்களாக மட்டுமாக புரிந்து கொள்ளக்கூடாது. மாறாக இந்திய அரசும், நவீன பொருளாதார சக்திகளும் ,நிகழ்கால அரசியல் அமைப்புகளும் இதுபோன்ற பிற்போக்கு கருத்தியல்களுக்கு நிறுவனங்களுக்கு புதுவாழ்வு அளிக்கின்றன.

பெண்களது நிபந்தனையற்ற விடுதலைக்கான உரிமைகளை அறுதியிடல் செய்வது என்பது: தங்கள் விருப்பப்படி இணையர்களை அவர்களே தேர்வு செய்துகொள்ளும் உரிமை, மணம் செய்து கொள்வதா, வேண்டாமா என்பதற்கான சுதந்திரம், குழந்தை பெறுவதா வேண்டாமா என்பதற்கான சுதந்திரம், சமூகத்திலும் பணியிடங்களிலும் அமைப்பாகும் சுதந்திரம், குடும்பத்தில் முதுகை முறிக்கும் வேலையை புறந்தள்ளும் சுதந்திரம், ஓய்வை, அமைதியை அனுபவிக்கும் சுதந்திரம், பொதுவெளிகளில் சுதந்திரமாக புழங்கும் சுதந்திரம்- நியாயமானதும் அவசியமானதுமாகும். மேலும் இது எப்படி வர்க்கப் போராட்டத்திற்கு மையமானதோ, சாதி அழித்தொழிப்புக்கு மய்யமானதோ அதுபோல் இவை பெண்கள் இயக்கத்திற்கும் அவசியமானது, மய்யமானது. இதே அளவுக்கு இந்தியாவில் பெண்கள் இயக்கம், முதலாளித்துவம், நிலப் பிரபுத்துவ எச்சங்கள், பார்ப்பனியம் ஆகியவற்றை அதன் முழு ஆற்றலையும் திரட்டி எதிர்த்துப் போராட வேண்டும்.

பெண்கள் இயக்கம், சமத்துவம் கவுரவம், ஜனநாயக சுதந்திரங்களைக் கோருவது, வென்றெ டுப்பது என்பதோடு நின்றுவிடுவதில்லை. ஒரு சோசலிச சமுதாயம் மட்டுமே பெண்களது முழுமையான விடுதலை நோக்கிய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் உகந்த சூழ்நிலையை வழங்க முடியும்.

சோசலிசம் என்பது கம்யூனிச சமுதாயத்தை நோக்கி மாறிச், செல்வதை குறிக்கிறது. கம்யூனிசத்தில் (பொதுவுடமை சமூகத்தில்) வர்க்கப்பிளவுகள், தனிச் சொத்து இருப்பதில்லை. அங்கு மட்டுமே பெண்கள் உண்மையாகவே முழு விடுதலையை அடைந்தவர்களாக இருப்பார்கள். இதனால்தான் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் கம்யூனிசத்தை அதன் வழிகாட்டும் கருத்தியலாக கொண்டு புரட்சிகர அரசியல் சக்திகளுடன் நெருக்கமாக, மொத்த சமூகத்தையும் விடுதலை செய்யும் போராட்டத்தில் பணியாற்றுகிறது. பெண் விடுதலை இல்லாமல் எந்தவொரு புரட்சியும் முழுமை அடைவதில்லை பெண் விடுதலைக்கான போராட்டம் புரட்சி இன்றி முழுமை அடையாது என்று அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் நம்புகிறது.

**மாண்புமிகு ஜி!**

**நான் இளைஞர்களுக்கு சொல்வது இரவின் இருளின் முடிவில் வெளிச்சம் இருக்கும் என்பதுதான்.**

**வெளிநாட்டு நிருபரது பாட்காஸ்ட் பேட்டியில் மோடி**

*உங்கள் ஆட்சியின் முடிவில்தானே ஜி? - ஒரு இந்திய இளைஞன்*

**பெண்கள் பாதுகாப்புக்கே உச்சபட்ச முன்னுரிமை — மார்ச் 8 அன்று குஜராத்தில் மோடி**

*மணிப்பூர் பெண்களுக்கு பாதுகாப்பு எப்போது ஜி?*

**குஜராத் கலவரத்தில் நான் குற்றமற்றவன் என்று உச்சநீதி மன்றமே சொல்லிவிட்டது.**

**வெளிநாட்டு நிருபரது பாட்காஸ்ட் பேட்டியில் மோடி**

*பிறகு ஏன் பிபிசியின் குஜராத் பைல்ஸ் படத்தை தடை செய்தீர்கள் ஜி? - ஒரு குஜராத் குடிமகள்*




**இது எங்கள் வழி; இது எங்கள் பாதை அஇமுபெக முழக்கம்!**

எழுச்சிமிக்க வகையில் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் மார்ச் 8 உழைக்கும் பெண்கள் முழக்கப் பேரணியை நடத்தியது. தஞ்சை ஆற்றுப்பாலம் சந்திப்பிலிருந்து தோழர் சந்தனமேரி பேரணியை தொடங்கி வைத்துப் பேசினார். மாநில அமைப்பாளர் ஆ. ரேவதி தலைமை தாங்கிச் சென்றார். ஏராளமான கொடிகள் கோரிக்கை தட்டிகள், உரத்த முழக்கங்களுடன் வண்ணமயமாக பேரணி அணிவகுத்துச் சென்றது. பெண்கள் மீதான தொடரும் வன்கொடுமைகளுக்கு முடிவுகட்ட வேண்டும். பொள்ளாச்சி, அண்ணாபல்கலைக் கழக குற்றவாளிகள் விரைவாக தண்டிக்கப்பட வேண்டும். மரணதண்டனை வேண்டாம்; உறுதியான தண்டனையே வேண்டும். நூறுநாள் வேலைத்திட்ட ஊதிய பாக்கியை உடனே வழங்க வேண்டும். வேங்கைவயல் உண்மைக் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். குற்றமற்ற தலித்துகளை விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முழங்கின.

பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள பெரியார் சிலைக்கு தோழர்கள் ரேவதி, மணிமேகலை, கட்சி மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் சுசீலா, ஈஸ்வரி உள்ளிட்ட தலைவர்கள் மாலை அணிவிக்க, பெண்விடுதலை பேசிய பெரியார் புகழ் நீடுழி வாழ்க முழக்கம் போக்குவரத்தை திக்குமுக்காடச் செய்தது.

திலகர் திடல் அருகில் முடிந்தது பேரணி. அங்கு நடந்த கூட்டத்துக்கு தலைமைதாங்கி பேசிய பிலோமினா, மார்ச் 8 கொண்டாட்ட நாளல்ல, போராட்ட நாள் என்று கூறினார். தஞ்சை மாவட்டத் தலைவர்கள் விஜயாள், சசிகலா, ஜெசிந்தா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தோழர் சந்தனமேரி பெண்ணுரிமைப் பாடல் பாடி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். பேரணியில் கலந்து கொண்டவர்களை பாராட்டி மாநில அமைப்பாளர் ஆ.ரேவதி பேசினார். "115 ஆண்டுகளுக்கு முன்பு, உழைப்புக்கேற்ற ஊதியம், வாக்குரிமை, சமத்துவம் கோரி தெருவுக்கு வந்து போராடிய பெண்கள் மார்ச் 8 அய் தொடங்கி வைத்தனர். கம்யூனிஸ்ட் பெண் தலைவர்கள் முயற்சியால் மார்ச் 8 உழைக்கும் பெண்கள் நாளாக உருவானது" என்று கூறிய ரேவதி, இந்த உரிமைகளை பாதுகாக்க தொடர்ந்து போராடுவோம் என்று கூறினார். அடுத்து பேசிய தேசிய பொதுக்குழு உறுப்பினர் மாதவி, 33% இட ஒதுக்கீட்டை சட்டமாக்கி விட்டேன் என்று பெருமை பேசுவதை மோடி நிறுத்தி விட்டு உடனடியாக அந்த சட்டத்தை செயல்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார். பெரும்பான்மையாக பெண்கள் வேலை செய்யும் நூறுநாள் வேலைத்திட்டத்தில் மாதக் கணக்கில் ஊதியம் வழங்காமல் ஏழைகளை ஏமாற்றிவரும் மோடி ஆட்சியைக் கடுமையாக சாடினார்.

போராட்டங்களையே கொண்டாட்டமாக நடத்துவதுதான் மார்ச் 8.

ஊதியம், வாக்குரிமை, சமத்துவம் கோரி அமெரிக்காவின் தையல் தொழிலாளர் தெருவுக்கு வந்ததை பெண்கள் கழக மாநில அமைப்பாளர், கட்சியின் மாநிலக் கமிட்டி உறுப்பினர் ரேவதி கூறினார். முதலாளித்துவ சுரண்டல் சங்கிலியிலிருந்து விடுவித்துக் கொள்ளும் போராட்டமே மார்ச் 8. அதே மார்ச் 8 அய் கொண்டாட்டமாக்கி முதலாளித்துவ-மனுஸ்மிருதி சுரண்டல், ஒடுக்குமுறை சங்கிலியில் மீண்டும் கட்டிப் போடவே பிற்போக்கு சக்திகள் முயற்சிக்கின்றன. இதற்காகவே, மார்ச் 8 ன் போராட்ட வரலாற்றை, புரட்சிகர உணர்வை, பாசிசத்திற்கு எதிராக பெண்கள் விரோத மனுஸ்மிருதிக்கு எதிராக போராடும் போராட்டத் தேவையை கொன்றுவிடும் நோக்கத்தோடுதான் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சியாக, கோலப்போட்டி நிகழ்ச்சியாக, அழகுசாதன விற்பனை நிகழ்ச்சியாக மாற்றிட செயல்படுகின்றர். பெண்கள் கழகம் இதற்கு ஒருபோதும் உடன்படாது, அடிபணியாது. முற்போக்கு பாதையில் பெண்களுக்கு விழிப்புணர்வூட்ட போராட வேண்டும். இன்னும்

அதிக அளவில் பெண்களை அணிதிரட்டிட உறுதி ஏற்க வேண்டும். இதுதான் பெண்கள் கழகத்தின் பாதை.

நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி இன்று குஜராத்துக்குசென்றுள்ளார்.பெண்களைலட்சாதிபதி களாக்கும் நிகழ்ச்சிக்கு சென்றிருக்கிறார். நூறுநாள் வேலைக்கு பல மாதங்களாக ஊதியம் தராமல் பல கோடிப்பெண்களை பிச்சாதிபதியாக்கி விட்டு ஒருகோடிப் பெண்களை லட்சாதிபதியாக்குகிறாராம் மோடி! குஜராத் சென்றுள்ள அவருக்கு, பெண் போலீஸ் அதிகாரிகள், காவலர்கள் 2372 பேர் பாதுகாப்பு அளித்துள்ளனர். பிரதமரை பெண்கள் பாதுகாக்கிறார்கள். பெண்களை பிரதமர் பாதுகாக்கி றாரா? மணிப்பூர் பெண்களுக்கு பாதுகாப்பு எங்கே? இன்று ஒடிஷா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகள் பல சலுகைகளை அறிவித்து முழுப்பக்க விளம்பரங்களை வெளியிட்டுள்ளன. பெண்களுக்குத் தேவை சலுகைகள் மட்டுமல்ல. உரிமைகள் வேண்டும், வேலை, சமக்கூலி, சமவாய்ப்பு வேண்டும். சுதந்திரம் வேண்டும்; அச்சமற்ற சுதந்திரம் வேண்டும். அதற்காகத்தான் பெண்கள் கழகம் நாடு முழுக்க போராடி வருகிறது. முதல்வர் ஸ்டாலின் தனது மகளிர் நாள் செய்தியில், பெண்ணை தாயாக, மனைவியாக, மகளாக அடையாளப்படுத்தி பாராட்டியுள்ளார். தாய், மனைவி, மகள் என்பதைவிட பெண் எனும் அடையாளமே அடிப்படையானது, முதன்மை யானது. ஆணைச்சுற்றியே பெண் இருக்கவேண்டும் என்று சொல்கிறது முதலமைச்சரின் செய்தி. பேரணி வரும்வழியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து வந்தீர்கள். பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? என்று எழுதினார். பெண்விடுதலைக்காக வாழ்நாள் முழுக்கப் போராடினார். அந்த தமிழ்நாட்டில் முதலமைச்சர் இவ்வாறு பேசுவது அதிர்ச்சி அளிக்கிறது. பெண்கள் கேட்பது அச்சமற்ற சுதந்திரம். அதை முதல்வர் உறுதிசெய்திட வேண்டும்.

மார்ச் 8 உற்சாகத்தோடு இரண்டாவது மாநில மாநாட்டை நோக்கி முன்னேற வேண்டும், வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகிறேன். கட்சி மாநிலச் செயலாளர் கூறியது போல கட்சி, எப்போதும் பெண்கள் கழகம் முன்னேற, வெற்றிபெற துணையாக நிற்கும்.

**பேரணியில் கலந்து கொண்டவர்களை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ) மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி பேசியபோது;**

"எழுச்சிமிக்க இந்தப் பேரணி, 2025 அய் பெண்கள் கழகத்தின் போராட்ட ஆண்டாக்கிடும் உற்சாகத்தை தந்திருக்கிறது" என்று கூறியவர், போராட்ட ஆண்டாக மாற்றுவீர்கள் என்று நம்புவதாகவும் கூறினார். அடுத்த மார்ச் 8ல் பல்லாயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொள்ளும் பேரணி இன்னும் பலமடங்கு எழுச்சியுடன் நடத்துவதை நோக்கி முன்னேற வேண்டுமென அழைப்பு விடுத்தார். பெண்கள் கழக போராட்டத்தில் மாலெ கட்சி எப்போதும் உறுதியுடன் துணை நிற்கும் என்று கூறினார்.

**நிறைவாக அவிகிதொச மாநிலத் தலைவர் பாலசுந்தரம் பேசியபோது;**

தஞ்சை நகரமே திரும்பிப் பார்க்கும் வகையில் வெற்றிகரமான பேரணியை நடத்திய அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத் தலைவர்களுக்கு பாராட்டுகள். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து வந்துள்ள உங்களுக்கு அதுவும் கைக்குழந்தைகளுடன் கால்கடுத்தாலும் உற்சாகம் குறையாமல் பேரணியில் கலந்துகொண்ட உங்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று தஞ்சையை திரும்பிப் பார்க்க வைத்த நீங்கள் நாளை தமிழகத்தையே திரும்பிப் பார்க்க வைப்பீர்கள். அதற்கும் வாழ்த்துகள்!

பேரணிக்கு போலீஸ் இடையூறு செய்ய முயன்றதைப்பற்றி கவலைப்படாமல், இது எங்கள் வழி, பெண்கள் கழகத்தின் பாதை, எங்களை யாரும் தடுக்க முடியாது. விண்ணில் பாதி, மண்ணில் பாதி எமக்கேச் சொந்தம் என்று முழக்கமிட்டு வந்துள்ளீர்கள். வாழ்த்துக்கள்!

## பேரணியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. கடந்த 115 ஆண்டுகளாக உலகம் முழுவதும் அகில உலக பெண்கள் நாள், ஒடுக்குமுறை, சுரண்டல், பழைய மரபுகளுக்கு எதிரான போராட்ட நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதை கொண்டாட்ட நாளாக காட்டுவதன் மூலம், மனுஸ்மிருதி ஒடுக்குமுறை, உலகமய கார்ப்பரேட் சுரண்டல், ஆணாதிக்க வன்முறை, பாலின பாகுபாடு இவற்றை கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்ளச் செய்ய ஆட்சியாளர்களும் ஆதிக்க சக்திகளும் முயற்சித்து வருகின்றனர்.

இந்த முயற்சிகளை முறியடித்து அனைத்து வகையிலும் நீதி, சமத்துவம், விடுதலை பெறும் போராட்டத்தை கொண்டாட்டமாக்க அகில உலக பெண்கள் நாளில் பெண்கள் கழகம் உறுதி ஏற்கிறது.

2. கிளாரா ஜெட்கின், ரோசா லக்சம்பர்க், சாவித்திரி பூலே,பாத்திமா ஷேக், வேலு நாச்சியார், முத்துலட்சுமி ரெட்டி, மணியம்மை, ராமாமிர்தம், அஞ்சலை, ஜானகியம்மாள், சிறீலதா சுவாமிநாதன், பகத்சிங், பெரியார், அம்பேத்கர், வினோத்மிஸ்ரா, சிங்காரவேலர் ஆகிய தலைவர்களின் பெண்ணுரிமை, சமூகநீதி, சமத்துவம், விடுதலை போராட்ட கருத்துகளால் ஊக்கம் பெற்றுள்ள பெண்கள் கழகம், தமிழ்நாட்டில் காலூன்றத்துடிக்கும் சனாதன (மனு ஸ்மிருதி) சக்திகளை தோற்கடிக்கும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உறுதி ஏற்கிறது.

3. 'பெண்கள் சக்தி' பற்றி வாய்கிழிய பேசும்




மோடி ஆட்சி, பெண்கள் உழைப்பு சக்தியை கொடுமையாக சுரண்டவும் மனு ஸ்மிருதி கருத்தியல் சங்கிலியில் பிணைத்து பெண்கள் பெற்ற முன்னேற்றங்களை அழித்தொழிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறது.

பொதுசிவில் சட்டம், குடியுரிமை திருத்தச்சட்டம் இவற்றை திணிக்கும் மோடி ஆட்சி, பெண்களுக்கு சமத்துவம், சமநீதி, சுதந்திரம் இவற்றை மறுத்து வருகிறது. சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்தியாவில், மோடி ஆட்சிபோல் பெண்கள் விரோத ஆட்சி வேறெதுவும் இல்லை. இதற்கு எரிந்து கொண்டிருக்கும் மணிப்பூர் சாட்சி. மனுஸ்மிருதியை சட்டமாக்க துடிக்கும் ஆர்எஸ்எஸ் வழிகாட்டுதல்படி ஆட்சி நடத்துகிறது மோடி ஆட்சி. அரசமைப்பு வழங்கியுள்ள மதச்சார்பின்மை சமத்துவம், ஜனநாயகம், சோசலிச மாண்புகளை ஒழித்துக் கட்டுவதன் மூலம் அம்பேத்கர் எச்சரித்த இந்து ராஜ்ய பேரழிவை தடுத்துநிறுத்த அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்க தொடர்ந்து போராட பெண்கள் கழகம் உறுதி ஏற்கிறது.

4. பெண்கள் பாதுகாப்புடன், பெண்களை முதலாளிகளாக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மோடி, பெண்களது கவுரவத்தையும் வாழ்வாதாரத்தையும் உறுதி செய்யும் திட்டங்கள் எதையும் நிறைவேற்றவில்லை. 33% இட ஒதுக்கீடு சட்டமும் முடிவின்றி தள்ளிப்போடப்பட்டிருக்கிறது.

57% பெண்கள் வேலைசெய்யும் நூறுநாள் வேலைத்திட்டத்தை 200 நாட்களாக்க வேண்டும். நாள் கூலியை ரூ600 ஆக்க வேண்டும். இதற்கேற்ப 3 லட்சம் கோடி நிதி ஒதுக்க வேண்டும்.

வெட்டவெளி கழிப்பிடத்தை ஒழிப்பது, அனைவருக்கும் வேலை, சமக்கூலி, வீடு, குடிநீர் வசதிகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் பெண்கள் மீதான வன்முறை பாகுபாடு இவற்றிலிருந்து விடுபட "அச்சமற்ற சுதந்திரத்தை" உறுதி செய்ய வலியுறுத்தி போராட உறுதி ஏற்கிறது.

5. பெண்கள் முன்னேற்றத்தில் பல சாதனைகளை கண்டுள்ள தமிழ்நாட்டில், பெண்களுக்கு எதிரான வன்கொடுமை அதிகரித்து வருகிறது. பெண்களுக்கு பாதுகாப்பானது தமிழ்நாடு என்ற உச்சாடனத்தை நிறுத்திவிட்டு, கல்வி நிறுவனங்கள், அலுவலகங்கள், வேலைசெய்யும் இடங்கள் உள்ளிட்ட பொதுவெளிகளில் பெண்கள் அச்சமற்று புழங்குவதை உறுதி செய்ய வேண்டும். இதுவே சமூகநீதி அரசுக்கு அடையாளமாக இருக்கும். ஒட்டுமொத்த பெண் சமுதாயமும் எதிர்க்கும் டாஸ்மாக் சாராயக் கடைகளை மூடவேண்டும்.

6. பெண்கள் மீதான அதிகரித்து வரும் வன்முறை, மலத்தால் இழிவுபடுத்தப்பட்ட தலித்துகளையே குற்றவாளியாக்கும் வேங்கை வயல் மாதிரி தலித் ஒடுக்குமுறை, நாள்தோறும் கைது, படகு பறிமுதல், சிறை, வாழ்வாதார அழிப்பை எதிர்கொள்ளும் மீனவர் சமூக பிரச்சனை இவற்றுக்கு உடனடி தீர்வுகாண அனைத்து கட்சிகள், தலித், பெண்கள், மீனவர் அமைப்புகளைக் கூட்டிட வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசை பெண்கள் கழகம் வலியுறுத்துகிறது.

## தொழிற்சங்கங்களின் ஆயத்த மாநாடுகள்

மோடி அரசின் தொழிலாளர் விரோதப் போக்கிற்கு எதிராக வருகிற மே 20 அன்று நடைபெறவிருக்கும் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தை வெற்றிபெறச் செய்ய அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பாக மண்டல மாநாடுகள் நடைபெற்றன. 14.03.2025 அன்று சேலத்தில் நடைபெற்ற மண்டல மாநாட்டில் ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் சங்கரபாண்டியன் உரையாற்றினார். நெல்லையில் 15.03.2025 அன்று நடைபெற்ற மண்டல மாநாட்டில் ஏஐசிசிடியு சார்பாக மாநில துணைத் தலைவர் S. M. அந்தோணிமுத்து உரையாற்றினார். 17.03.2025 அன்று சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் சொ.இரணியப்பன் உரையாற்றினார். மதுரையில் 18.03.2025 அன்று நடைபெற்ற மாநாட்டில் ஏஐசிசிடியு மாநிலப் பொதுச் செயலாளர் க.ஞானதேசிகன் உரை நிகழ்த்தினார். 20.03.2025 அன்று திருச்சியில் நடைபெற்ற மண்டல மாநாட்டில் ஏஐசிசிடியு மாநில துணைத் தலைவர் மதியழகன் உரையாற்றினார். இந்த மண்டல மாநாடுகளில் ஏஐசிசிடியு மாநில, மாவட்ட நிர்வாகிகள் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் உட்பட தொழிலாளர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

## தலித் மக்கள் மீது அதிகரிக்கும் சாதியாதிக்க வெறித் தாக்குதல்களை, படுகொலைகளை தடுத்திட அனைத்து கட்சிகள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்!

## நீதியரசர் சந்துரு அறிக்கையினை நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வெளியிட வேண்டும்!

தமிழகத்தில், குறிப்பாக தென் மாவட்டங்களில், அதுவும் குறிப்பாக ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டமாக இருந்த நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில், பட்டியலின மக்கள் மீது சாதியாதிக்க வெறித் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. பள்ளி மாணவர்கள் மத்தியில் சாதியாதிக்க வெறித் தாக்குதல்கள் நடப்பது அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. இரண்டு ஆண்டிற்கு முன், நான்குநேரி சின்னதுரை, அவருடன் படித்த ஆதிக்க சாதி மாணவர்களால் வீட்டிற்குள்ளேயே வைத்து மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டார். சின்னதுரையின் தங்கையும் தாக்கப்பட்டார். பட்டியலின மக்கள் மீது அதற்கு முன்பும் தாக்குதல்களும் படுகொலைகளும் நடைபெற்றுள்ள போதும் மாணவர்கள் மத்தியில் நடந்த அந்த சாதிவெறித் தாக்குதல் பெரும் அதிர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்தியது. தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை நியமித்தது. நீதியரசர் சந்துரு அவர்களும் தனது அறிக்கையை மாநில அரசிடம் வழங்கி உள்ளார். நான்குநேரி இனி எப்போதும் வேண்டாம் என்று கூறி சில பரிந்துரைகளையும் முன்வைத்தார். ஆனால், இதுவரை அப் பரிந்துரைகள் அமல்படுத்தப்படாமலேயே உள்ளன. அந்த அறிக்கையைக் கூட தமிழ்நாடு அரசு இன்னும் வெளியிடவில்லை என்பதுதான் வேதனையான விசயம்.

இந்தச் சூழ்நிலையில், கடந்த 10.03.2025 அன்று தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தாலுகா, அரியநாயகிபுரத்தைச் சேர்ந்த பட்டியலின மாணவர் தேவேந்திர ராஜாவை, அவர் 11ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுவதற்காக பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது, அப் பேருந்தை வழி மறித்து, பேருந்தில் இருந்து இறக்கி, மூன்றுபேர் சேர்ந்து சாதியைச் சொல்லி அசிங்கமாகப் பேசி, கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். தேவேந்திர ராஜா கபடிப் போட்டியில் வெற்றி பெற்று அதைக் கொண்டாடினார் என்பதற்காக ஆதிக்க சாதியினரால் வெட்டப்பட்டுள்ளார் என்பது நாம் நவீன உலகத்தில்தான் இருக்கிறோமா? என்கிற கேள்வியை எழுப்புகிறது. கபடிப் போட்டியில் வெற்றி பெற்று கொண்டாடியதற்கு அல்ல, தேவேந்திர ராஜா மாற்று சமூகப் பெண்ணைக் காதலித்தார் அதனால்தான் வெட்டினார்கள் என்று இப்போது வேறு ஒரு கதை உலா வருகிறது. அப்படியே இருந்தால்கூட, காதலிப்பது குற்றமா? காதலித்தால் வெட்டுவேன் என்பதும் கொடூர சாதியாதிக்க வெறிதானே.

பாதிக்கப்பட்டவர்களைக் குற்றவாளிகள் ஆக்குவது, பாதிக்கப்பட்டவர்கள் மீது அவதூறு களைப் பரப்புவது, அசிங்கப்படுத்துவது என்பது சாதியாதிக்க சக்திகளின் உத்தியாக மாறிக் கொண்டிருக்கிறது. இதை காவல்துறையில் உள்ளவர்களும் சேர்ந்து கொண்டு செய்கிறார்கள் என்பது அதிர்ச்சியளிப்பதாகும்.

ஓராண்டிற்கு முன்னர், நெல்லை, மணி மூர்த்தீஸ்வரம் பகுதியில் இரண்டு தலித் இளைஞர்களை முட்காட்டிற்குள் வைத்து அடித்து, அவர்கள் மீது சிறுநீர் கழித்து கொடூரமான வன்கொடுமையில் ஈடுபட்டார்கள் சாதியாதிக்க வெறியர்கள். அந்த சாதியாதிக்க குற்றவாளிகளின் செயலை நியாயப்படுத்த, பாதிக்கப்பட்ட தலித் இளைஞர்களை ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டனர் என அவதூறு பரப்பினர். ஏதோ இவர்கள்தான் கலாச்சாரக் காவலர்கள் என்பது போல்.

பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்கள் நடக்கும் போது, புகாரை வாங்க மறுப்பதிலிருந்து, புகார் வாங்கிவிட்டால், உண்மையை மாற்றி எழுதச் செய்வது, உண்மைக் குற்றவாளிகளை காப்பாற்ற பொய்யான குற்றவாளிகளை ஜோடிப்பது, அப்படிச் செய்ய வழியில்லை என்றால், வன்கொடுமைச் சட்டத்திற்குப் புறம்பாக குற்றவாளிகளைக் கைது செய்யாமல் இழுத்தடிப்பது, சட்டப்படியான காலத்திற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் இழுத்த டிப்பது என பல வகைகளிலும் சாதியாதிக்கச் சக்திகளுக்கு ஆதரவாக காவல்துறையிலுள்ள உயர் அதிகாரிகளில் இருந்து அடிமட்ட காவலர்கள் வரை செயல்பட்டு வருகிறார்கள். இதற்கு மாறாக நேர்மையாகச் செயல்படுபவர்கள் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடக் கூடிய நிலையே உள்ளது.

திருவைகுண்டம் அரியநாயகிபுரம் கிராமத்தில் தேவேந்திரராஜா குடும்பம் உட்பட பறையர் சமூகத்தினர் 25 குடும்பங்கள். பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 10 குடும்பங்கள். அருந்ததியர் 1 குடும்பம், மறவர், நாடார்,



நெல்லை மருத்துவமனையில் தேவேந்திர ராஜாவைச் சந்தித்து ஆறுதல் கூறிய போது




நெல்லை பத்திரிகையாளர்கள் சந்திப்பு

செட்டியார், கோனார் மொத்தமே 250 குடும்பங்கள்தான் இருக்கின்றன. தேவேந்திர ராஜா சமூகத்தினர் வீட்டில் ஆண்கள் 5 பேர்கள் மட்டுமே ஊரில் இருக்கிறார்கள். மற்ற ஆண்கள் வெளி மாநிலங்களில் வெளியூர்களில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். தேவேந்திர ராஜாவின் தந்தை தங்க கணேசிடம் பேசியபோது அங்கு சனாதன சாதியப் படிநிலை ஊறிப்போய் இருப்பதைக் காண முடிந்தது. தேவேந்திர ராஜாவை வெட்டிய குற்றவாளிகள் மூன்று பேருமே அண்ணன், தம்பிகள். படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு, ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். மூன்று பேரின் பெயரும் லெட்சுமணன். சனாதன சாதியப் படிநிலையை மதித்து மீறாமல் நடந்து கொண்டால் பிரச்சனைகள் கிடையாது.

17.3.2025 அன்று மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி தேவேந்திரராஜாவை மருத்துவமனைக்குச் சென்று பார்த்து ஆறுதல் கூறினார். முன்னதாக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வரைச் சந்தித்து சிகிச்சை விவரங்களைக் கேட்டறிந்தார். அவருடன் மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் த.சங்கரபாண்டியன், ஜி.ரமேஷ். மாநிலக்குழு உறுப்பினர் கா.கணேசன், மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் கருப்பசாமி, மாரிமுத்து, செல்வம் சென்றிருந்தனர். தொடர்ந்து நெல்லை பத்திரிகையாளர் மன்றத்தில் ஊடகத்தினரையும் சந்தித்தார். அன்றைய நாள் வரை தமிழ்நாடு அரசுத் தரப்பில் இருந்து எந்தவொரு அதிகாரியும்கூட வந்து பார்க்கவில்லை என்று தேவேந்திரராஜாவின் தந்தை கூறினார். பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினரைத் தவிர வேறுயாரும் வந்து பார்க்கவு மில்லை. சமூக நீதி பேசும் தமிழக அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை.

தமிழகத்தில் 2016லிருந்து 2024 மார்ச் மாதம் வரை 394 கிராமங்களில் சாதிய வன்கொடுமைகள் அதிகமாக உள்ளன என்று கார்த்திக் என்பவரின் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் தெரிய வருகிறது. அதில் மதுரை - 45, திருநெல்வேலி - 29, திருச்சி - 24, தஞ்சாவூர் - 22, தேனி - 20 ஆகிய மாவட்டங்கள் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன. இது மேலும் மேலும் அதிரித்துக் கொண்டேதான் இருக்கின்றது. 2024ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 1090 சாதிய வன்கொடுமைச் சம்பவங்கள் நடந்துள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது. பாசிச பாஜக மோடி ஆட்சிக்கு வந்தபின்னர், வட மாநிலங்களில் மட்டுமின்றி. தமிழ்நாட்டிலும் சாதியாதிக்க வன்கொடுமைகள் தலைவிரித்தாடுகின்றன. நாளுக்கு நாள் இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகின்றதேயன்றி குறைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் தமிழக அரசு எடுக்கவில்லை.

ஆகவே,

**தலித் மக்கள் மீதான தொடர் தாக்குதலைத் தடுத்திட, அதற்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளைப் பொறுப்பாக்க வேண்டும்!**

**சாதியாதிக்க வெறித் தாக்குதலைத் தடுக்க தனிச் சட்டம் கொண்டு வரவேண்டும்!**

**நடப்பு சட்டப்பேரவை கூட்டத்தொட ரிலேயே நீதிபதி சந்துரு அறிக்கையை முன்வைக்க வேண்டும்!**

**தொடரும் தலித் வன்கொடுமைகள் குறித்து அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டப்பட வேண்டும்!**

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி, புரட்சிகர இளைஞர் கழகம், நீதிக்கான மக்கள் இயக்கம் இணைந்து விரிவான பரப்புரை இயக்கம், போராட்டங்கள், பேரணிகள் நடத்திட திட்டமிட்டு வருகிறது.

**பட்டியலின மக்கள் மீது நடக்கும் தாக்குதல்களைத் தடுத்திட அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்க கோரி, இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து போராட வேண்டும், சாதியாதிக்க வெறித் தாக்குதல்களைத் தடுத்திட பணியாற்றிட வேண்டும் என அறைகூவல் விடுக்கிறது.**



# காலனியாதிக்கவாதிகளின் ‘பிரித்தாளும்’ சூழ்ச்சித் திட்டத்திற்கு இந்தியா மீண்டும் பலியாகிவிடக் கூடாது

மிக முக்கியமான வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவாதம் தற்போது நாடாளுமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் டிரம்ப் அரசாங்கம் இந்திய பொருளாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் இந்தியாவிற்கு நாள்தோறும் அவமானத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது. எலான் மஸ்க்கும் அவரது பொருளாதாரப் பேரரசும் அமெரிக்காவில் பெரும் எதிர்ப்பைச் சந்தித்து க்கொண்டிருக்கும் போது, மோடி அரசாங்கமோ இந்தியாவில் மஸ்க்கின் தொழில் முயற்சிக்கு சிவப்புக் கம்பளம் விரித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள முதலீட்டாளர்களுக்குப் பங்குச் சந்தை பெருமளவிலான இழப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களோ வேறு நாடுகளில் நிலையானதும் இலாபகரமானதுமான சந்தைகளுக்குப் புலம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதைப் பற்றியும் முதுகெலும்பில்லாத வகையில் மோடி அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிந்து வருவது பற்றியும் கோடி ஊடகமும் (kodi media) பாலிவுட்டும் தருகின்ற எரிசக்தியைக் கொண்டு சங் பரிவாரம் முஸ்லிம்கள் மீதான பகைமை, வன்முறை ஆகியவற்றுக்குள் ஆழமாகச் சென்று கொண்டிருப்பதைப் பற்றியும் பொதுவெளியில் எந்தச் சொல்லாடலும் நடப்பதில்லை.

மகாராஷ்ட்ராவில் அண்மையில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் பாஜக மோசடித்தனமான வெற்றியை அடைந்த நாளிலிருந்து சங் பரிவாரம் அந்த மாநிலத்தை வெறுப்புக்கான பரிசோதனைக்கூடமாக மாற்றுவதற்கு அதிக நேரத்தைச் செலவிட்டு வருகிறது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்து வந்த ஆறாவது முகலாய மாமன்னர் ஔரங்கசீப்பை இழிவு படுத்துவதன் மூலம் முஸ்லிம் விரோத வெறியைத் திட்டமிட்டுத் தூண்டிக் கொண்டிருக்கிறது. அண்மையில் வெளிவந்து, பெரும் வசூல் சாதனை படைத்த ‘சாவா’ திரைப்படம், சிவாஜியின் மகனும் இரண்டாவது மராத்தா அரசருமான ஷாம்பாஜியை ஔரங்கசீப் மிகக் கொடூரமாகக் கொலை செய்த காட்சியை விரிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளதன் மூலம் சங் பரிவாரம் எரிந்து கொண்டிருக்கும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியுள்ளது. மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ் உள்ளிட்ட பல பாஜக அமைச்சர்கள் ஔரங்கசீப்பைக் கண்டனம் செய்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர். இந்த அறிக்கைகளும்கூட ஔரங்கசீப்பின் சமாதியை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு தந்து வெறித்தனமான வெறுப்பை ஊக்குவித்துள்ளன. இது மகாராஷ்ட்ர முதலமைச்சரின் தொகுதியான நாக்பூரில் நடைபெறும் முதல் மதவாத வன்முறைக்குக் கொண்டு சென்றுள்ளது.

சிவாஜியின் வழித்தோன்றல்களுக்கு ஔரங்கசீப்பின் சமாதி பற்றியோ, இதர முகலாயச் சின்னங்கள் குறித்தோ எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை என்பதை கடந்தகால வரலாறு நமக்குக் காட்டுகிறது. ஷாம்பாஜி மகராஜின் மகனும் மராத்தாப் பேரரசின் அய்ந்தாவது சத்ரபதியுமான (மாமன்னர்) முதலாம் ஷாஹு, ஔரங்கசீப்பின் சமாதிக்குச் சென்று மரியாதை செலுத்தி வந்ததையும், ஔரங்கசீப்பின் மகள் ஸீனத்- உன் –நிஸ்ஸாவின் (சத்தாரா மசூதி பேகம்) நினைவின் பொருட்டு ஒரு மசூதியைக் கட்ட ஏற்பாடு செய்தார் என்பதையும் பற்றிய வரலாற்று ஆவணங்களும் உள்ளன. மராத்தாப் பேரரசுக்கும் முகலாயப் பேரரசுகளுக்கும் இடையே இருந்த உறவு என்பது கண்மூடித்தனமானதும்

தணிக்க முடியாததுமான மோதலாக மட்டுமே இருக்கவில்லை; மாறாக, மோதல்களுடன் கூடவே ஒத்துழைப்புகளும் இருந்த நுட்பமான உறவாகவே இருந்து வந்துள்ளது. எனவே இரு தரப்பினருக்கும் நடந்த போர், ராஜதந்திர உறவுகளை நிரந்தரமாக சீர்குலைக்கவில்லை. முகலாயச் சின்னங்கள் மராத்தா ஆட்சியாளர்களால் நாசப்படுத்தப்பட்டதுமில்லை. ஆனால் சங் பரிவாரம் மராத்தா வரலாற்றைத் திருத்தி எழுதுவதிலும் சமகாலத்தில் இஸ்லாமியர்களைப் பற்றி உருவாக்கப்படும் பீதியின் அடிப்படையில் மராத்தா மரபையும் அடையாளத்தையும் மறுவரையறை செய்வதிலும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஔரங்கசீப்பின் சமாதியையும் முகலாயர்களின் மரபு முழுவதையும் குறிவைத்து நடத்தப்படும் வலுவான வெறுப்பு இயக்கம் – மாணவர்களின் வரலாற்றுப் பாடத்திலிருந்து முகலாய ஆட்சியாளர்களின் வரலாறு நீக்கப்பட்டுள்ளது – முஸ்லிம் சமுதாயத்தின் வாழ்வாதாரத்தின் ஒவ்வொரு அம்சத்தின் மீதும் குறிவைத்து அதிகரித்து வரும் அளவில் திட்டமிட்டு சங்பரிவாரம் நடத்தி வரும் முஸ்லிம் விரோத செயல்திட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாக உள்ளது. உத்தரப் பிரதேசம், உத்தர்காண்ட், மத்தியப் பிரதேசம் ஆகியவை வெறுப்பு அரசியலின் முக்கியமான பரிசோதனைக் கூடங்களாக உள்ளன. அங்கெல்லாம் ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களை ஒடுக்குவதற்கு ஏதோவொரு காரணம் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த ஒடுக்குமுறைக்கான புதுப் புதுக் கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. உத்தரப் பிரதேசத்தில் வன்முறைப் பாதிப்புக்குள்ளாகியுள்ள சம்பாலில் பதட்டநிலை இன்னும் கொந்தளித்துக் கொண்டிருக்கிற நிலமையில், நாடு முழுவதிலுமுள்ள இன்னும் அதிகமான மசூதிகள், கல்லறைகள் அல்லது தர்காக்கள் மீது குறிவைத்து இடைவிடாத வெறுப்பு இயக்கம் நடந்து வருகின்றது. இந்த ஆண்டு ஹோலி பண்டிகைக் கொண்டாட்டம் கூட, முஸ்லிம்களின் வெள்ளிக்கிழமைத் தொழுகைகளுக்கு எதிரான, முஸ்லிம்களுக்கு எதிரான நச்சுப் பரப்புரை இயக்கமாக மாற்றப்பட்டது. ஹோலிப் பண்டிகை அமைதியாக நடப்பதை உறுதி செய்வதற்குப் பதிலாக, சம்பால் பகுதி மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் அனுஜ் சௌத்ரி முஸ்லிம்களை வீட்டுக்குள்ளேயே இருக்கும்படி கூறினார். இதை சட்டென்று ஆதரித்த யோகி ஆதித்யநாத், வட இந்தியா முழுவதிலும் முஸ்லிம்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய வெறுப்பு பேச்சுகள் நடப்பதற்கான மனோநிலையை உருவாக்கினார். சம்பால் பகுதியில் இருந்த மசூதிகள் அனைத்தும் தார்பாலின்களைக் கொண்டு மூடப்பட்டுள்ளது போல் தார்பாலின் ஆடைகளை அணிந்து கொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படி முஸ்லிம்களை பாஜக தலைவர்கள் கிண்டல் செய்தனர். காவல் துறையினர் தங்கள் பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டிருக்க, ஹோலிப் பண்டிகைக் களியாட்டக்காரர்களுக்கு, முஸ்லிம் சவ ஊர்வலத்தின் மீது கூட சேற்றை வாரி இறைப்பதற்கும் தைரியம் வந்தது. வெறுப்பு நிறைந்த இந்த சுற்றுச்சூழலில் இந்து, முஸ்லிம் சமுதாயங்கள் இரண்டுக்குமே விவேகத்துடனும் நல்லிணக்கத்துடனும் நடந்துகொள்ள பெரும் தைரியம் தேவைப்பட்டது. ஹோலிப் பண்டிகையின் பெயரால் நிலப்பிரபுத்துவ வன்முறைக்கு தலித்துகளும்கூட உட்படுத்தப்பட்டனர். பிகார் மாநிலத்திலுள்ள ஔரங்காபாத் மாவட்டத்தில் , ஹோலி பண்டிகையின் போது தடவப்படும் வண்ணப் பொடிகளை ஏற்றுக் கொள்ள மறுத்ததற்காக, கோமல் பஸ்வான் என்ற பதின்மவயது தலித் இளம் பெண் மீண்டும் மீண்டும் நசுக்கப்பட்டு சாகடிக்கப்பட்ட செய்திகள் வெளிவந்தன.

மோடி அரசாங்கம் சட்டங்களை உருவாக்குவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் வெறுப்பை உமிழ்கின்ற, தெருக்களில் வன்முறையை நடத்துகிற பரப்புரை இயக்கத்தினை நியாயப்படுத்துவதற்குத்தான். இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்: ஒன்று, பொது சிவில் சட்டம். இது ஏற்கெனவே உத்தரகாண்டில் சட்டமாக ஆக்கப்பட்டுள்ளது; இன்னொன்று வக்ஃப் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்குக் காத்திருக்கும் இந்த மசோதா முஸ்லிம்களை அச்சம், பாதுகாப்பின்மை, துன்புறுத்தல் ஆகியவை நிறைந்த சூழலால் நிரந்தரமாக பாதிக்கப்படக்கூடியவர்களாக ஆக்கியுள்ளது.பொது சிவில் சட்டத்தின் உத்தரகாண்ட் முன்மாதிரி, வேறு மதத்தைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்து கொள்வதற்கும் சாதிமறுப்பு மணம் செய்து கொள்வதற்கும் அல்லது தாங்களே தேர்ந்தெடுத்துக்கொண்ட உறவுடன் வாழ்வதற்கும் பருவமடைந்த தனிநபர்களுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சுதந்திரத்திற்கும்கூட அச்சுறுத்தலாகியுள்ளது. வக்ஃப் சட்டத் திருத்த மசோதா, சட்டமாக நிறைவேற்றப்படுமானால் முஸ்லிம் அறக்கட்டளைச் சொத்துகள், மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றின் மீது வக்ஃப் வாரியத்துக்குள்ள அதிகாரவரம்புகள் அனைத்தையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படக்கூடியதாக ஆக்கும்.

வரலாற்று முரண்நகை என்னவென்றால், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கரான சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகிய விண்வெளி வீரர்கள் நீட்டிக்கப்பட்ட விண்வெளி ஆராய்ச்சியிலிருந்து பூமிக்குத் திரும்பி வந்து கொண்டிருப்பதை உலகம் கண்டு களித்துக் கொண்டிருக்கும்போது, சங் பரிவாரமோ வெறுப்பு நிறைந்த அகழ்வாராய்ச்சி அரசியலுக்குள் இந்தியாவைத் தள்ளிக் கொண்டிருக்கிறது.

முன்னூறுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பே இறந்துபோன ஒரு பேரரசரின் கல்லறைக் கட்டடம் 2025ஆம் ஆண்டில் உலகில் மக்கள் தொகை மிக அதிகமாக உள்ள ஒரு நாட்டின் மையப்புள்ளியாகியுள்ளது; சமுதாய முன்னேற்றம், மக்களின் நலன் ஆகியவற்றில் முக்கியமான ஒவ்வொன்றிலும் தெரிவிக்கப்படும் புள்ளிவிவரங்களைப் பொறுத்தவரை உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும் கீழான நிலையில் தளர்ந்து போயுள்ள நாடுதான் இந்தியா.

இந்தியாவை, நாட்டுப் பிரிவினை என்ற பேரதிர்ச்சியில் ஆழ்த்துவதற்கு முன் இரு நூறாண்டுகள் அதனை அடிமைப்படுத்தி வந்ததற்கு காலனியாதிக்கம் பயன்படுத்திய மிகப் பெரும் ஆயுதம்தான் வகுப்புவாத (மதவாத) மோதல் என்பதை நாம் மறக்கக்கூடாது.

‘பிரித்தாளுதல்’ என்ற காலனியாதிக்க கால சூழ்ச்சியை திரும்பவும் செய்வது பேரழிவுக்கான உத்திதான். அபாயகரமான இந்த கண்ணிப்பொறியில் இந்தியா சிக்காமல் விலகியிருக்கவைக்க எல்லாவழிமுறைகளையும் பயன்படுத்தியாக வேண்டும்.

**எம்எல் செய்திக் கடிதம் மார்ச் 18–25; 2025**
**தலையங்கம்**

# இந்திய பிரதமருக்கு ஒரு இராமேஸ்வர மீனவனின் கடிதம்.

இராமேஸ்வரம் தீவு முழுக்க கடல் சார்ந்து வாழும் மீனவங்க நாங்க. கடலோடி வாழ்க்க நடத்தும் எங்கள தினந்தோறும் இலங்கைப்படை சுடுது. துப்பாக்கி முனையிலேயே கைது செய்து சிறையிலடைக்கிறது வாடிக்கையாகிப் போச்சு.

2014 தேர்தல் பிரச்சாரத்துக்கு தமிழ்நாட்டுக்கு வந்தீங்க. அப்ப, தில்லியில பலவீனமான அரசு இருப்பதனாலதான் தமிழ்நாட்டு மீனவர்கள இலங்கைப் படை தாக்குதுன்னு சொன்னீங்க. நீங்க பிரதமரானதும் எங்க மேல நடக்கும் தாக்குதல தடுத்து நிறுத்திடுவீங்கன்னு ரொம்ப நம்பிக்கையா இருந்தோம். நீங்க ஆட்சிக்கு வந்த பின்னாலே எங்க பிரச்சினை அதிகமாயிருச்சு. ஒங்க 10 ஆண்டு ஆட்சில 3455 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 671 படகுகள இலங்கை அரசாங்கம் பறிச்சிகிடிச்சி. உங்கள அமைச்சர் பார்லிமண்ட்ல கொடுத்த விவரந்தா இது. உங்களுக்கும் இது தெரியும். நீங்க சொன்ன வாக்க காப்பாத்தல.

வர்ற ஏப்ரல் மாதம் இலங்கை அதிபர சந்திக்கப் போறீங்கன்னு கேள்விப்படறோம். ராமேசுவரம் உட்பட தமிழ்நாடு காரைக்கால் மீனவர்கள் படும் துயரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க, இலங்கை அதிபரோட நீங்க பேசி வலியுறுத்தனும். இலங்கைல வந்திருக்கும் புது அதிபர் அவரது அரசாங்கம், அவங்களோட மீனவர்களுக்கு ஆதரவா பேசுது. அதுக்காக தமிழ்நாட்டு மீனவர்கள் மீது குற்றம் சுமத்துது. ஆனா நீங்க எங்களுக்கு ஆதரவா இதுவர ஒண்ணுமே பேசல.

உங்க கட்சிக்காரங்க அதான் பிஜேபிக்காரங்க கச்சத்தீவ காட்டி நல்ல அரசியல் பண்றாங்க. போன பார்லிமெண்ட் தேர்தல்ல கூட கச்சத்தீவை சொல்லி ஓட்டு கேட்டீங்க. இப்ப அதுபத்தி இலங்க அதிபரோட பேசி மீட்பதற்கு வலுவான பிரதமர் முயற்சி எடுக்கணும். கச்சத்தீவு நம்ம பூர்வீக பூமிதான். அதை மீட்டெடுக்க நீங்க ஏன் முயற்சி எடுக்கக்கூடாது? கொஞ்ச நாளைக்கு முன்னாலே எங்க மீனவர் சங்கத் தலைவர் சேசுவின் இரண்டு படகுகளையும் இலங்கை கடற்படை பறிமுதல் செஞ்சிருச்சு. அதில மீன் பிடிக்கச் சென்ற மீனவங்க 13 பேரை கைதும் செஞ்சிருக்கு இலங்கை அரசாங்கம். 13 பேரும் வவுனியா சிறையில அடைச்சு வச்சிருந்தாங்க. வவுனியா சிறையில இப்போது ரொம்ப சித்ரவதை செய்யுறாங்க. சிறை அதிகாரிங்களுக்கு தமிழ் மீனவங்களைக் கண்டாலே பிடிக்கல. கைதிகளை மிகவும் கேவலமாவும், கொடூரமாவும் நடத்துறாங்க. குளச்சல் முதல் காரைக்கால் வரை உள்ள மீனவர்கள் இந்த 10 ஆண்டுகளா படும் துயரம் கொஞ்ச நஞ்சமல்ல. இது உங்கள் அரசுக்கும் தெரியும். தாக்குதல் சம்பவம் நடக்கும் போதெல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுக்கும் வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதறார். தமிழ்நாடு எம்பிக்களும் பார்லிமென்ட்ல பேசுறாங்க ஆனா நீங்க அந்த கடிதங்களுக்கு பதிலெழுதுறதுமில்ல. பார்லிமென்ட்லேயும் பேசுறதில்ல. உங்க கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை, தமிழக மீனவர்கள் கடத்தல் வேலை பாக்குறதா அபாண்டமா பழிசொன்னார். அவரை நீங்க கண்டிக்கவும் இல்ல.

மார்ச் 1 முதல் 4 ந் தேதிவரை ராமேசுவரம் மீனவர்கள் உண்ணாவிரதம், கஞ்சித்தொட்டி என பல போராட்டங்கள் நடத்தினோம். ஏகப்பட்ட இழப்பு. மீனவர் சமுதாயத்தின் வாழ்வாதாரம் பறிபோனது. இதுபோல ஒவ்வொரு தாக்குதல் நடக்கும் போதும் தமிழ்நாட்டு, புதுச்சேரி மீனவர்கள் நாங்க போராடுறோம். கடலுக்கு போகாமல் வேலைநிறுத்தமும் செய்யுறோம். இவ்வளவுக்குப் பிறகும் நம்பிக்கையோடு உங்களுக்கு இந்த கடுதாசிய எழுதுறோம்.

மார்ச் 5 ந் தேதி தமிழக முதல்வர் அனைத்துக்

கட்சி கூட்டம் சென்னையில நடக்கப் போறதா அறிவிச்சிருந்தாரு. அந்தக் கூட்டத்தில் எங்க பிரச்சினையையும் பேசி அனைத்துக்கட்சி ஆதரவுடன் ஒன்றிய ஆட்சிக்கு கூடுதலாக அழுத்தம் கொடுத்திருக்கலாம். ஆனா ஏனோ முதலமைச்சர் அப்படி செய்ய முன்வரல.

ஏப்ரல் முதல் வாரத்தில இலங்கை போறீங்க. அங்க நீங்க அம்பானிக்கும் அதானிக்கும் தொழில் செய்ய வாய்ப்பை உருவாக்குவீங்கன்னு எனக்கும் தெரியும். எல்லாருக்கும் தெரியும். இருந்தாலும் நமது நாட்டு குடிமக்களாகிய எங்க (தமிழ் மீனவங்க) பிரச்சினைய பத்தி நீங்க இலங்கை அதிபரிடம் பேசுங்க. இது உங்களுக்குள்ள கடமை. இந்தக் கடமைய தட்டிக் கழிக்கமாட்டீர்கள் என்று நம்புகிறோம். அரசுமுறை பேச்சுவார்த்தைய ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு தமிழ்நாட்டு மீனவர்களது வாழ்வில் இடர்மிகுந்த காலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். விஸ்வகுருவான உங்கள் தலைமை இதற்கு தீர்வு காணவேண்டும்.

**எங்க கோரிக்கைகள் இவைதான்:**

சமீபத்தில் இராமேஸ்வரம், பாம்பன், கோட்டைப்பட்டினம், காரைக்கால் ஆகிய இடங்கள்ல இலங்கை கடற்படையால்; கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள எஞ்சிய மீனவர்களையும் எந்த நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். வழக்குகளை ரத்து செய்ய வேண்டும்.

இலங்கை அரசு பறிமுதல் செய்து அரசுடமையாக்கிக்கொண்ட தமிழ்நாட்டு படகுகளை மீண்டும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கனும்.

1974 ஒப்பந்தம் அதற்கடுத்து 1976 திருத்தப்பட்ட ஒப்பந்தங்களை மறுபடியும் பரிசீலித்து நாங்க (தமிழ் நாட்டு மீனவங்க) பாதிப்படையாத அளவிற்கு புதிய ஒப்பந்தம் போட முயற்சி எடுங்க.

**ஒப்பந்தத்தின் உடனடித் தீர்வுகளாக:**

1.குறுகலான கடல்பகுதியை இருநாட்டு மீனவர்கள் மோதலின்றி மீன்பிடி வாழ்வாதாரத்தை பாதுகாத்துக்கொள்ளவும் பாக் நீரிணை பரம்பரை மீன்பிடி தளமாக இருப்பதால் மீன்வளத்துக்கும் உயிரியல் சூழலுக்கும் பாதிப்பு இல்லாமல் மீன்பிடித் தொழில் உரிமையை பாதுகாக்க வேண்டும்.

2.விசைப்படகு மீனவங்க குறைந்தபட்சம் 60 நாட்களுக்கு தொழில் செய்ய அனுமதி வேண்டும். பரம்பரை மீன்பிடி நாட்கள் இந்திய பரம்பரை மீனவர்களுக்கும், இலங்கை பரம்பரை மீனவர்களுக்கும் சமமானதாக இருக்க வேண்டும்.

3. இந்திய எல்லையான வெட்ஜ்பேங்க் ( கன்னியாகுமரி அருகே) பகுதியில பெரு வணிக மீனவங்களை நீங்க அனுமதிக்கிறது போல தமிழக விசைப்படகு மீனவங்க ஆழ்கடல் தொழில் நுட்பத்திற்கு மாற்ற வரை பாதிப்பில்லாத இழுவை வலை தொழில் நுட்பத்தை பயன்படுத்த இலங்கை அரசிடம் வலியுறுத்தி ஒப்புதல் பெற வேண்டும்.

**நிரந்தர மற்றும் நீண்ட காலக் கோரிக்கைகள்:**

1.இராமேஸ்வரத்தில் மீனவர்களின் அடர்த்தியைக் குறைக்கும் விதத்தில இராமநாதபுரம் மூக்கையூரில நவீன மீன்பிடி துறைமுகம் அமைக்கணும். மத்திய ஒன்றிய அரசு பூர்வாங்க அனுமதி தந்துள்ள இந்த திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்கணும்.

2.கடலோர மீனவர்களின் தகவல் தொடர்பு வசதிக்காக செயற்கைக் கோளோடு இணைந்த நவீன தொழில் நுட்பத்தோடு கூடிய தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் உருவாக்கணும்.

3. ஏர்வாடியில் தடுப்புச்சுவரும் படகுத்துறையும் அமைச்சிடணும்.

4.பாம்பனில் தடுப்புச்சுவரும் படகுத்துறையும் அமைக்கணும்.

5. ஆழ்கடல் மீன் பிடிப் பூங்காக்கள் உருவாக்கணும்;.

6. கப்பல் பழுது நீக்க தளம் உருவாக்க வேணும்.

7. பாம்பன் நீர்வழித்தடம் ஆழப்படுத்தப்படணும்.

8. கடல்பாசி ( உயர்ரக குளோரல்லா பாசி வகைகள்) உற்பத்தியை வளர்ப்பதோடு கூண்டு மீன்பிடித்தல் மற்றும் அலங்கார மீன் வளர்த்தல் உருவாக்கணும்;

9. நவீன கட்டமைப்புடன் கூடிய மருத்துவமனை கட்ட வேணும்.

10. மீன்பிடி தொழில் நுட்பக் கழகம் நிறுவணும்.

11.மிக முக்கியமாக மீன்வளம், கடல் உயிர்ச்சூழல், காலநிலைக்கும் தென்தமிழகத்துக்கும் பெரும் அச்சுறுத்தலான கடலில் எரிவாயு, எண்ணெய் தோண்டும் பேரழிவு கார்ப்பரேட் திட்டங்களைக் கொண்டு வரக்கூடாது.

மேற்கூறிய உடனடி, நீண்டகாலக் கோரிக்கைகளையும் தீர்வுகளையும் ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் நிறைவேற்றிட வேண்டும். அப்போதுதான் மீனவங்க துயரம் முடிவுக்கு வரும். நீங்க இலங்கை அரசோடு பேசி மீனவர்களின் நலன் காக்க புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கி செயலாக்க வேண்டும் என்பதே தமிழக மீனவர் பிரச்சினைக்கான தீர்வு என மீனவ மக்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். உங்க இலங்கை பயணம் எங்க மீனவ மக்களுக்கு விடிவைத் தரும்னு ஆவலோடு எதிர்பார்க்கிறேன். மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள தீபகற்ப இந்தியாவின் பிரதமராகிய நீங்கள் இந்திய மீனவ சமுதாயத்துக்கு பாதுகாப்பும் கவுரமிக்க வாழ்க்கையும் அமைய தமிழ்நாடு மீனவர்கள் துயரத்துக்கு முடிவுக்கு கொண்டுவந்தால் இது நல்ல ஒரு துவக்கமாக அமையும். இந்தவகையில் அமைந்தால்தான் உங்கள் பயணம் வெற்றிப் பயணமாக இருக்கும்.

**ஒரு சாமான்ய மீனவன், இந்திய குடிமகன்,**
**இராமேஸ்வரம்**

# தொழிலாளர்களை கொத்தடிமைகளாக்கும் எல்&டி தலைவர் எஸ்என். சுப்பிரமணியம் கருத்துக்களை திரும்பப் பெற வைப்போம்!

இலட்சக்கணக்கான எல் அண்ட் டி தொழிலாளர்களின் கொடுபடா ஊதியமே எல் அண்ட் டி நிறுவனத் தலைவர் எஸ்.என். சுப்பிரமணியத்தின் ஆண்டுச் சம்பளம் ரூ.51 கோடி.

இந்தியா முழுவதும் 20 வகையான தொழில்களில் ஈடுபடும் நான்கு லட்சம் தொழிலாளருக்கு மேல் பணி புரியும் லார்சன் அன்ட் டியூப்ரோ (எல் & டி) கார்ப்பரேட் நிறுவனத்தின் தலைவர் சென்னையைச் சேர்ந்த எஸ்.என். சுப்பிரமணியன்.

அந்நிறுவனம் அவருக்கு, மொத்த ஊதியம், இதர சலுகைகளாக ஆண்டு ஒன்றுக்கு 51 கோடி ரூ வழங்குகிறது. அவருடைய அடிப்படை சம்பளம் ஆண்டுக்கு ரூ 3.6 /-கோடி. இதர சலுகைகள் ஆண்டுக்கு ரூ1.67/- கோடி. எல் அண்ட் டி நிறுவனம் செய்யும் வணிகத்தில் ஆண்டுக்கு ரூபாய் 35.28/- கோடி அவருக்கு தரகுத் தொகையாக கொடுக்கப்படுகிறது. அவருடைய ஓய்வுகால பலன்களாக மட்டுமே ஆண்டுக்கு ரூபாய் 10.5/- கோடி தனியாக வழங்கப்படுகிறது.

இது அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு நடுத்தர பதவி வகிக்கும் மேலாளர் ஊதியத்தை விட 535 மடங்கு அதிகம்.

அன்றாடம் ரூபாய் 258 தினக்கூலி பெறும் எல் அண்ட் டி புதுச்சேரி ஆலையில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளர் ஊதியத்துடன் ஒப்பிடும்போது எத்தனை ஆயிரம் மடங்கு? என்பதை வாசகர்களே கணக்குப் போட்டுக் கொள்ளலாம். யாருக்கும் தலைசுத்தினால் அதற்கு சுப்ரமணியனே பொறுப்பு!

ஏன் இந்த கணக்கு என்று வாசகருக்கு தோன்றலாம். வாரம் ஒன்றுக்கு 90 மணி நேரம் தொழிலாளர் வேலை செய்ய வேண்டும் என்று சுப்ரமணியன் கூறியதை முந்தைய இதழில் கூறியிருந்தோம். தொழிலாளர் தங்கள் மனைவியர் முகத்தை எவ்வளவு நேரம் தான் உற்றுப் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள்? ஞாயிற்றுக்கிழமையும் வேலைக்கு வாருங்கள் என அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

புதுச்சேரி, எல் அண்ட் டி யில், நாள் ஒன்றுக்கு 12 மணி நேரத்திற்கு மேல் வேலை பார்த்த ஒப்பந்த தொழிலாளருக்கு மிகுதி நேரப் பணிக்கு இரண்டு மடங்கு ஊதியம் வழங்க வேண்டும். ஆனால், கடந்த 25 ஆண்டு கால வரலாற்றில் நிர்வாகம் கொடுக்கவே இல்லை. நாடு முழுவதும் எல் அண்ட் டி நிறுவனங்கள், ஆலைகள், பணியிடங்களில் நான்கு லட்சம் தொழிலாளர் பணி நிரந்தரம் இன்றி பல பத்து ஆண்டுகளாக வேலை பார்த்து வருகின்றனர். எல் அண்ட் டி நிறுவனத்தின் நிரந்தரமற்ற, நிச்சயமற்ற பணிச்சூழல் காரணமாக இதுவரையில் 40 லட்சம் தொழிலாளர் நீடித்து வேலை பார்க்க முடியாமல் வெளியேறி உள்ளனர் என்பதை அதன் தலைவர் எஸ்என் சுப்பிரமணியனே ஒப்புக் கொள்கிறார். நான்கு லட்சம் தொழிலாளரை தொடர்ந்து பணியில் தக்க வைக்க 16 லட்சம் தொழிலாளரை சேமப்படையாக வைத்துள்ளார். இந்த 12 லட்சம் தொழிலாளர் நிலமை என்ன? அவர்களுக்கு வேலை, ஊதியம் உண்டா என்பதைப் பற்றி சுப்ரமணியம் சொல்லவில்லை. ஆனால், தங்கி தாக்கு பிடிக்கும் தொழிலாளர் அடக்குமுறை பணி நிலைமைகளை, கொத்தடிமை வேலைமுறையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லாமலே தெரிகிறது. இவர் தலைவராக உள்ள நிறுவனங்களில் இதுதான் நடக்கிறது.

எடுத்துக்காட்டாக புதுச்சேரியின் நான்கு ஆலைகளிலும் கடந்த 20 ஆண்டுகளில் 25,000 தொழிலாளர் பணியில் சேர்ந்து வெளியேறி உள்ளனர். ஏஐசிசிடியு தொழிற்சங்க போராட்டத்தின் விளைவாக புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை ரூபாய் ஒரு கோடியே 60 லட்சம் மிகுதிநேரப் பணி நிலுவையாக தொழிலாளருக்கு வழங்க உத்தரவிட்டிருந்தது. ஆனால், ஆண்டுக் கணக்கில் பணத்தை வழங்காமல் இழுத்தடிக்கும் நிர்வாகம்தான் எல் அண்ட் டி நிர்வாகம். பணி நிரந்தரம், சட்டக்கூலி, நிரந்தர தொழிலாளிக்கு இணையான போனஸ், பணிக்கொடை வழங்காமல் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்தத் தொழிலாளரை சுரண்டும் எல் அண்ட் டி நிறுவனத்தின் தலைவர் உலகறிந்த எஸ் என். சுப்ரமணியன் நிரந்தர தொழிலாளருக்கு இணையாக இன்னும் சொல்லப்போனால் கூடுதல் திறனுடன் வேலை பார்க்கும் நிரந்தரமற்ற தொழிலாளியின் நாள் கூலி ரூபாய் 600 /-முதல் ரூபாய் 750/- கூட தாண்டுவதில்லை.

புதுச்சேரியில் உள்ள நான்கு ஆலைகளில் பணிபுரியும் நிரந்தரமற்ற தொழிலாளர் எண்ணிக்கை தோராயமாக 600 ஆகும். பல பத்து ஆண்டுகளாக வேலை பார்த்தாலும் நடைமுறைத் தினக்கூலி ரூபாய் 600/-ஐ தாண்டுவதில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒரே மாதிரி வேலை பார்க்கும் நிரந்தர தொழிலாளியின் மாதக்கூலி ரூபாய் 60 ஆயிரத்திற்கும் மேல். அதாவது நாள் கூலி ரூபாய் 2300-/. கூலி வித்தியாசம் ஒரு தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 1700. 600 தொழிலாளரால் மிச்சமாகும் கூலி ரூபாய் 10,20,000/-

நாடு முழுவதும் எல்&டி பணியிடங்களில் சுமார் மூன்று லட்சத்து முப்பதாயிரம் நிரந்தரமற்ற தொழிலாளர் பணிபுரிகின்றனர் என்று எஸ்.என் . சுப்பிரமணியன் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார். இந்த 3,30,000 தொழிலாளர் கொடுபடா நாள் கூலி ரூ56 கோடி. லட்சக்கணக்கான நிரந்தரமற்ற தொழிலாளரின் கொடுபடா ஊதியமே எல்அண்ட்டி

## தோழர் குகாநந்தனுக்கு செவ்வணக்கம்!



மதுரை சிபிஐ எம்எல் மேனாள் மாவட்டச் செயலாளரும் அகில இந்திய தொழிற்சங்க மய்ய கவுன்சில் மதுரை மாவட்ட அமைப்பாளருமான தோழர் குகாநந்தன் 19.2.2025 அன்று காலமானார்.
மலையக தமிழரான தோழர் சிறுவயதில் தாயகம் திரும்பியவர். நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மதுரை கட்சியின் மூத்த உறுப்பினர். கட்சிப் பணிகளை காலம் முழுவதும் செய்து வந்தவர். நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நமது AICCTU சங்கத்தைக் கட்டமைப்பதிலும் சுமைதூக்கும் தொழிலாளர்களை அமைப்பாக்குவது, அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதிலும் முக்கியப் பங்காற்றியவர்.



கடந்த சில மாதங்களுக்கு முன்பு தன் மகள் குடும்பத்தாரைச் சந்திப்பதற்காக, தன் துணையுடன் அயர்லாந்து சென்றிருந்தார். பிரிட்டனில் காரல் மார்க்ஸ் கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார். 19.2.2025 காலை நாடு திரும்பி, வீட்டுக்குள் நுழைந்தவர் இதயத் தாக்குதல் ஏற்பட்டு உயிரிழந்தார்.
தோழர் குகாநந்தன் அவர்களுக்கு நினைவஞ்சலிக் கூட்டம் மதுரையில் 16.3.2025 அன்று நடைபெற்றது. அக் கூட்டத்தில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத் தம்பி, ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் டி. சங்கரபாண்டியன், ஊடகவியலாளர் டி.எஸ்.எஸ்.மணி, கட்சியின் மதுரை மாவட்டச் செயலாளர் மதிவாணன், மாநிலக்குழு உறுப்பினர்கள் ஈஸ்வரி, சுப்புராமன், மு.ராமச்சந்திரன், தமிழ்த்தேச மக்கள் முன்னணியின் தலைவர் மீ.த.பாண்டியன், தேவராஜ் மற்றும் தோழர் குகாநந்தனின் குடும்பத்தினரும் நண்பர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## தோழர் நந்தலாலா; தோழர் நாறும்பூநாதன் ஆகியோருக்கு செவ்வஞ்சலி





**இடதுசாரி, முற்போக்கு இலக்கியவாதிகளும் எழுத்தாளர்களுமான தோழர் நந்தலாலா மற்றும் தோழர் நாறும்பூநாதன் இருவரும் எதிர்பாராத தருணத்தில் மரணமடைந்துள்ளார்கள். இந்துத்துவ மதவெறி பாசிசம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் இருவரின் இறப்பானது இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக இயக்கங்களுக்குப் பெரும் இழப்பாகும். இருவரின் குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆறுதலையும் தோழர் நந்தலாலா மற்றும் தோழர் நாறும்பூநாதன் ஆகியோருக்கு செவ்வணத்தையும் மாலெ தீப்பொறி தெரிவித்துக் கொள்கிறது. 5.3.2025 அன்று திருச்சியில் நடைபெற்ற தோழர் நந்தலாலாவின் இறுதி நிகழ்ச்சியில் இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் க.ஞானதேசிகன் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார். 17.03.2025 அன்று நெல்லையில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி தோழர். நாறும்பூநாதனின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் ஆறுதல் கூறினார். அவருடன் இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர்கள் சங்கரபாண்டியன், ஜி.ரமேஷ், கணேசன், மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜ் மற்றும் கருப்பசாமி, சண்முகம் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.**



தலைவர் எஸ். என். சுப்பிரமணியத்தின் ஊதியம். உரிமை கேட்டால் புதுச்சேரி மாநிலத்தில் ஆலைகளை மூடியது போல் தொழிலாளரை எதிர்கொள்ள முடியாமல் ஆலைகளை மூடி விட்டு ஓடும் நிர்வாகத்தின் உலகறிந்த தலைவர் எஸ் என் சுப்ரமணியம். மோடி, அதானி, அம்பானிகளை செல்வத்தை உற்பத்தி செய்பவர்கள் என்று கூறுகிறார். சுப்ரமணியமும் நாராயணமூர்த்தியும் வாரத்திற்கு 70, 90 மணி நேரம் வேலை செய்யச் சொல்கிறார்கள். வளர்ந்த இந்தியாவை இப்படித்தான் உருவாக்கப் போகிறார்கள். அதற்காகத்தான் 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை கொண்டுவரத் துடிக்கிறார். ஏஅய்சிசிடியு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் மே 20 அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு தயாராகி வருகின்றனர். எல் அண்ட் டி தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் முழுமூச்சாய் பங்கேற்க வேண்டும். எஸ் என் சுப்ரமணித்தின் கருத்தை திரும்பப் பெற வைக்க வேண்டும். மோடி ஆட்சியின் தொழிலாளர் சட்டத்தொகுப்பையும் திரும்பப் பெற வைக்க வேண்டும். **—சோ பா**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.03.2025 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# மோடி அரசிற்கு எதிராக...
# தொழிற்சங்கங்களின் ஆயத்த மாநாடுகள்















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by Chennai Offset Printers, 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, Chennai - 600002. Editor G.Ramesh